தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் யாண்டு — 2015 உருத்ரோத்காரி — பங்குனி மார்ச் — ஏப்ரல் 1984	மலர் 12

இருபெரும் விழா

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்

த. வே. உமாமகேசுவரனார்

நாவலர், பண்டித

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

நூற்றாண்டு விழாக்கள்

தண்டமிழ்ப் புரவலர் தமிழ்வேள் த. வே. உமாமகேசுவரனார், தாமே பயின்ற தமிழ்ப் பேராசான் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய இருபெருமக்களின் நூற்றாண்டு விழாக்கள்

இரத்தாட்சி ஆண்டு சித்திரைத்திங்கள் 9, 10, (21, 22—4—1984) ஆகிய இரண்டு நாட்களிலும் நிகழும் என்பதைப் பொழிலன்பர்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றேன்.

இவ் இருபெரும் விழாக்களையும் தமிழக அரசுச்சார்பில் அரசு விழாவாக ஏற்று நடத்துவது பாராட்டிற்குரிய செயலாகும். இவ் விழாவில் தமிழக அரசு அமைச்சர் பெருமக்களும் அறிஞர்களும் தமிழ்ச்சான்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நூற்றாண்டு விழாக்களுக்கு உரியவர்களாகிய தமிழவேள் உமாமகேசுவரனாரும், நாட்டார் ஐயா அவர்களும் தங்களுடைய

தமிழ்த்தொண்டேயாகும். தமிழவேள் அவர்களால் உருவாக்கப்பட்ட இத்தமிழ்ச் சங்கத்தில் மழலையர் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு வரை கல்வி வகுப்புக்கள் இயங்கி வருகின்றன. வெகுவிரைவிலேயே தமிழவேள் அவர்களின் நெடுநாளைய விழைவாகிய தமிழாய்வுகளும் இங்குத் தொடங்கவிருக்கின்றன.

நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா:-

வரலாற்றுப் புகழ்பெற்ற இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கமாகிய கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசவரனார் அவர்கள் விரும்பியவாறு நான்கு ஆண்டுகள் (1941 44) ஊதியம் பெறாமல் மதிப்பியல் முதல்வராகப் பணிசெய்து சிறப்பித்தார்கள் நாட்டார் ஐயா. இலக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குதல், சொற்பொழிவுகள் ஆற்றுதல், சைவசித்தாந்த சமயச் சொற்பொழிவுகள் செய்தல் ஆகியவற்றை இடையறாது செய்துவந்த நாட்டார் ஐயா அவர்களுக்கு 24—12—1940இல் சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழ் மாநாட்டில் "**நாவலர்**" என்னும் சிறப்புப் பட்டம் செப்பேட்டில் பொறித்து வழங்கப்பெற்றது.

அகநானூறு, சிலப்பதிகாரம் மணிமேகலை, திருவிளையாடற் புராணம், இன்னா நாற்பது இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கு உரையெழுதி தமிழ்க்கடலாக விளங்கிய நாட்டார் ஐயா அவர்கள் தம் நுண்மாண் நுழைபுலத்தினால் ஆராய்ந்து, வெளியிட்ட தமிழாராய்ச்சி நூல்கள் பலவாகும். அவை கள்ளர்சரித்திரம், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கண்ணகி, வரலாறும் கற்புமாண்பும், சோழர் சரித்திரம், கட்டுரைத்திரட்டு என்பனவாகும். மேலும், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ், சித்தாந்தம் முதலிய தமிழாராய்ச்சித் திங்கள் இதழ்களில் வெளிவந்த அவருடைய ஆய்வுக்கட்டுரைகள் பலவாகும்.

1925—26-இல் தஞ்சையில் அல்லது திருச்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பெற வேண்டுமென்று விரும்பி, அறிஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து அப்போது சென்னை மாகாண அமைச்சராக இருந்த டி. என். சிவஞானம்பிள்ளை அவர்கள் தலைமையில் அமைத்த செயற்குழுவில் ஓர் உறுப்பினராக இருந்து செயலாற்றிச் சிறப்பித்தவர்கள் நாட்டார் அவர்கள்.

பாவேந்தரின் 'முதியோர் காதல்'

டாக்டர் இராம சுப்பிரமணியன்,

முதியோர் காதலின் முதற்பதிப்பு முன்னுரை

தங்கமும், மணவழகும் முதுமை பெற்றனர். மக்களைப் பெற்றனர். பேர்த்திமார் கண்டனர்.

வாழ்நாளெல்லாம் அறங்கள் வழுவாது காத்தனர். அவர்கள் நிரம்பிய உள்ளத்தினர்.

புலன்கள் தேய்ந்தன. கருவிகள் ஓய்வு பெற்றன. உள்ளம் உண்டு. "முதியோர் காதல்" இன்னது என மொழிவது இந்நூல்.[1]

இது பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'முதியோர் காதல்' முதற்பதிப்பு முன்னுரை ஆகும்.

'குடும்பவிளக்குக்'கே இமயமாகத் திகழ்வது 'முதியோர் காதல்'. காதல் வாழ்வின் பெருமையையும், குடும்ப விளக்கின் சிறப்பையும் கலைமணங்கமழக் கொட்டிக் குவித்துள்ளார் இப்பகுதியில் ஒவ்வொரு சொல்லும் கவிஞரின் கலைமயமான உணர்ச்சி தேங்கி நிற்கும்படி அமைத்துள்ளார். சுமார் ஐம்பது பாடல்களில் இப்பகுதி அமைந்திருக்கிறது.

குடும்ப விளக்கு முதற் பகுதியில் வீட்டுத் தலைவியாக, மருமகளாக வந்த தங்கம் மூத்து நரைத்துத் தங்கத் தம்மையா

(முன் பக்கத் தொடர்ச்சி)

தம் வாழ்நாள் முழுவதும் மனம், மெய், மொழிகளால் தமிழுக்காகவே வாழ்ந்து, அப்படிவாழ்தலையே ஒருதவமாக எண்ணி, தம்மைத் தமிழுக்கே ஒப்புக் கொடுத்தவர்களாகிய மேற் குறித்த தண்டமிழ் அறிஞர் இருவரையும் நினைவு கூர்ந்து போற்றும் வகையில் நிகழவிருக்கும் இரு நூற்றாண்டுவிழா நிகழ்ச்சி களில் தமிழ்ப்பேரன்பர்களும் புரவலர்களும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

ச. இராமநாதன்,

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

---

1 ஆசிரியரின் முன்னுரை

ரானார். அந்த அம்மையாரின் கணவன் மணவழகு நரைமுதிர மணவழகரானார். இந்த இரண்டு முதியவர்களுக்கும் பணி செய்யும் பேறு பெற்றவள் வேடப்பனின் மனைவி நகைமுத்து, இந்த மூத்தோர்களை :-

ஆடிய பம்பரங்கள்
அல்லவா அம்மூத்தோர்கள்? [2]

என்று அறிமுகம் செய்து வைக்கின்றார் பாவேந்தர். பம்பரமாகச் சுழன்று இவர்கள் வேலையும் பணியும் செய்ததையெல்லாம் முதற் பகுதியிலே கவிஞர் கூறினார். இப்போது வேடப்பனும் நகை முத்துவும் ஆடும் பம்பரங்கள்;இவர்கள் இருவரும் ஆடிய பம்பரங்கள்,

முதுமை பெற்ற மணவழகரின் உடல் சருகு; விழியிலோ ஒளி மங்கியது; வாயில் பல்லில்லை; பால் கஞ்சி; உலவுதல் மிகக்குறைவு. தங்கத் தம்மையாரும் அப்படியே.

மணவழ கர்க்கு முன்போல்
வன்மையோ தோளில் இல்லை
துணைவிழி, ஒளியும் குன்றக்
கண்ணாடித் துணையை வேண்டும்
பணையுடல், சருகு! வாயிற்
பல்லில்லை! மயிர்வெண் பட்டே!
உணவெலாம் பாலின் கஞ்சி!
உலவுதல் சிறிதே ஆகும்[3]

தங்கத்தம்மையாரின் உடல் வற்றித் தேய்ந்த சருகுபோல் இருக்கிறது. அவள் ஆயிரம் பிறைகள் கண்ட மூதாட்டி.

அன்புடல் அறத்தால் தேய்ந்த
ஆயிரம் பிறைமூ தாட்டி[4]

இருமுதியோர்களும் நிரம்பிய உள்ளத்தோடு வாழ்ந்து வருகின்றனர். காரணம்:

மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம்
மகள்மார்க்கும் அவ்வா றேயாம்
எம்தக்க கடன்மு டித்தோம்
இனிதாக வாழு கின்றோம்.[5]

---

2 பக். 201 3 பக். 202 4. பக் 203 5. பக் 203

நாட்டுக்கும் நலம் செய்தனர் இந்த முதியோர்கள் நல்லறம் நடத்தி வந்தனர்; பிறர்க்குத் தீமை செய்யவில்லை; சிறிது நன்றி செய்தவர்களையும் நாங்கள் மறக்கவில்லை என்று அவர்களையும் நினைவுகூரும் இரண்டு அன்பு உள்ளங்கள், முதியவரின் நெஞ்சிலே முதியோளே வாழ்கின்றாள்

கதையாகிக் கனவாய்ப் போகும்
நிகழ்ந்தவை; எனினும் அந்த
முதியோளே வாழு கின்றாள்
என் நெஞ்சில் மூன்று போதும்[6]

முதியோளின் உடம்பு புற்கட்டே; தள்ளாடி விழும் மூதாட்டி; வறள் நிலம் அவள் முகம்; குழிகள் விழுந்த கண்கள்; அவள் இருக்கின்றாள் என்பதே எனக்கின்பம் என்று கூறுகிறார் முதியவர்!

எதுஎனக் கின்பம் நல்கும்?
"இருக்கின்றாள்" என்ப தொன்றே[7]

முதியவள் என்னை நினைக்கின்றாள்; முதியவர் அவளை முதியவர் நினைக்கின்றார். எனினும்—

நினைக்கின்றாள் என்னை நினைக்கின்றேன் நான்
நிலைக்கின்ற தென்பால் இன்பம்![8]

முதுமைபெற்ற மணவழகர் தங்கத்தம்மையாரின் தளர்ந்த மேனியைக் காண இயலவில்லை. எனினும்

அன்புள்ளம் காணு கின்றேன்
அகத்தின்பம் காணு கின்றேன்[9]

என்று கூறுகின்றார்.

மணவழகனார் தன்னுடைய இறுதிக் காலத்தில் தன் துணைவி தங்கத்தம்மையாரைப் பற்றி மகிழ்ந்து மதிப்பிடுகிறார்.

இடும்பை தீர்ப்பவள் என்மனை! அவள் என்
குடும்ப விளக்கு[10]

இந்த தள்ளாத வயதிலும் மணவழகனார் தங்கத்தம்மையுடன் இருப்பதில் நாணம்:

6 பக். 204 7. பக். 205 8. பக் 205 9. பக் 205 10 பக் 213

புதுக்காலை ! குளிர்ந்த காலைப்
போதிலே உனைநெருங்கி
இதுபேசும் பேறுபெற்றேன்
என்றனன் கிழவோன் ! அன்னாள்
எதிர்வந்த அமிழ்தே, அன்பே
யான்பெற்ற இன்பம் போதும்
அதோநகை முத்து வந்தாள்
நமைக்காண்பாள் அகல்வீர் என்றாள். [11]

''நூற்று ஐந்து ஆண்டு வரை நீவிர் வாழக்காரணம் என்ன?' என்று வினவிய மணிமொழியார்க்கு இவர், ஒழுக்கமாக வாழ்ந் தமையும் இன்னபிற நல்வழிகளைத்தாம் பின்பற்றி ஒழுகின மையுமே என எடுத்துரைக்கின்றார். இறுதியில் இருவர் உள்ளங் களும் இன்பம் எய்துகின்றமை பற்றிக் கூறுகின்றார்.

வாய்முக்குக் கண் காது மெய்வாடினாலும்
மனைவிக்கும் என்றனுக்கும் மனமுண்டு கண்டீர்
தூய்மையுறும் அவ்விரண்டு மனம்கொள்ளும் இன்பம்
துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல் இல்லை
ஓய்வதில்லை மணிச்சிறகு; விண்ணேறி, நிலவாம்
ஒழுகமிழ்து முழுதுண்டு பழகுதமிழ் பாடிச்
சாய்வின்றிச் சறுக்கின்றி ஒன்றையொன்று பற்றிச்
சலிக்காதின் பங்கொள்ளும் இரண்டுமனப்பறவை ! [12]

இருமனம் இரு மயில்கள், தேன்சிட்டுக்கள், கிளிகள்,அமிழ்தின் கூட்டு. இரவு மணி பத்தாகியும் அவள் தூங்கவில்லை. அவனிடம் நகர்ந்து செல்லுகிறாள். ஒரு தலையணையில் அருகருகு கிடந் தார்கள். இருவர்களிப்பும் இயம்புமாறில்லை. நெடிய தூக்கம் நீடிய இன்பம்

தூங்கினார் கனவும் அற்ற
தூக்கநல்லுலகில் ! பின்னர்
ஏங்கினார் விழித்த தாலே !
இன்பமே விரும்பலானார் !
தூங்குவோம்! நிலைத்த இன்பம்
துய்ப்போம் நாம் என்றார் ! நன்றே
தூங்குகின்றார் நல்லின்பம்
தோய்கின்றார் வாழ்கின்றாரால் ! [13]

11. பக். 218 12 பக். 221 13. பக் 224

கம்பர் இராமாயணம் எழுதிய காலம்

டாக்டர் கு. இராசேந்திரன்

'கம்பர் இராமாயணம் எழுதிய காலம்' என்னும் இக்கட்டுரை கம்பர் வாழ்ந்த நூற்றாண்டு எது என்பது பற்றிய சிக்கலினும் அவர் தன்னுடைய வாழ்க்கையின் எந்தப் பகுதியில் இராமாயணத்தை எழுதியிருப்பார் என்பது பற்றிய சிக்கலையே முதன்மையாகக் கொண்டு ஆய்கிறது.

படிவங்கள்

கம்பர் இராமாயணத்தைத் தமது வாழ்நாளின் பிற்பகுதியிலேயே எழுதினார் என்பது இக்கட்டுரையின் முடிபாகும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பேரன் நீட்டிய மலை வாழைப்பழத்தைத் தாத்தாவுக்குக் கொடு என்கிறாளாம். இது வாழ்ந்த பழங்களின் காதல் மற்றவர்களையும் மறைத்துத் தின்பண்டங்களைப் பரிமாறிக் கொள்கிறார் மூதியோர். தங்கள் இளமைக் காதல் ஆடல்களை, நேரங்களை அடிக்கடி நினைத்தும் பேசியும் மகிழ்கின்றனர். மனவியலறிந்து எழுதப்பட்டன இவ்விடமெல்லாம். இவ்விடத்தேதான் துணைவியே 'குடும்ப விளக்கு' எனக் கவிஞர் கருத்து வெளிப்படுகிறது.

புரட்சிக் கவிஞர் அவர்களின் படைப்புக்கள் அனைத்தையும் படித்து முடித்த பிறகு அவற்றை நினைவில் நிறுத்தி ஒரு கண்ணோட்டம் விட்டால், சிறந்த கவிதைக்கு ஓர் எடுத்துக் காட்டாகப் பல்வேறு உணர்ச்சிகளை வெளியிடுகின்ற நவரசப் பெட்டகமாக அமைந்திருப்பது பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' என்ற நூலேயாகும் என்பது உணர முடியும்.

துணை நூற்கள்

சாலை இளந்திரையன் : **புரட்சிக் கவிஞர் கவிதை வளம்**, பாரி நிலையம், சென்னை, 1965.

மு. கோவிந்தசாமி : **பாரதிதாசன் கவித்திறன்**, பாரி நிலையம், சென்னை, 1969.

அ. ச. ஞானசம்பந்தன் : **இன்றைய இலக்கியம்**, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், 1971.

அதற்குரிய சிறப்பான வரலாற்றுச் சான்றுகள் எவையும் இல்லை. அவ்வாறான சான்றுகள் இல்லா நிலையினாலேயே இக்கட்டுரை கிடைக்கின்ற சில சான்றுகளைக் கொண்டு இக்கருத்தை அறிவிக்க முயல்கின்றது.

கம்பருடைய வாழ்க்கைக் குறிப்புகளை அவரின் அரும்பெரும் காப்பியத்திலிருந்தும் பெறமுடியும். அவ்வாறு பெறுங் குறிப்புக்கள் படிவங்களாக (Fossils) இருக்குமே யல்லாது முழு உருவங்களாக இருக்க முடியாது ஆயினும் படிவங்களைக் கொண்டே உருவங்களையும் ஒருவாறு கருதி அறியலாம்.

மன்னரைப் பாடாமை

கம்பரெழுதிய காப்பியம் என்றும் நின்று நிலைக்கும் பெருங் காப்பியமாகும். இராமாயணத்தைக் கம்பரெழுதிய காலம் பெரு வேந்தர்கள் ஆட்சிசெய்த காலம். கம்பர் வாழ்ந்த நூற்றாண்டு எதுவென்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவர் சோழர் காலத்தில் வாழ்ந்தவரே என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. மாமன்னர்கள் ஆட்சிக் காலத்தில் எழுந்த பேரிலக்கியங்கள் மாமன்னரைச் சுட்டாமல் செல்லுவது அரிது. செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் போன்ற அக்காலப் புலவர்கள் தாமெழுதிய நூல்களில் மன்னர்களைப் புகழ மறந்தார்கள் இலர். இவர்களின் நூல்களில் சோழ மன்னர்கள் திருமாலின் அவதாரங்களாகவே போற்றப்படுகின்றனர். இராச பாரம்பரியம் என்று வரும் இவர்களெழுதிய நூற்பகுதிகளில்[1] இதனை நன்கு காணலாம்.

ஆனால் கவிச்சக்கரவர்த்தி என்று பாராட்டப்பெறும் கம்பர்தாம் எழுதிய பெருங்காப்பியத்தில் யாண்டும் ஒரு மன்னனைக்கூடப் புகழ்ந்து பாடவில்லை. கங்கையும் கடாரமும் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டு ஆட்சிபுரிந்த முடியுடைப் பெருவேந்தர் களின் வழிவந்த சோழ மன்னனைக் கம்பர் பாடாது விட்டது ஏதோ வென்று நினைத்து விட்டுவிடக் கூடிய எளிய நிகழ்ச்சியன்று.

மன்னர்பகை

கம்பர் தம் காப்பியத்தில் மன்னனை வைக்க வேண்டிய இடத் தில் மன்னனுக்கும் மேலாக சடையப்பர் என்னும் வள்ளலை வைத் துள்ளார். இதுவொன்றே மன்னர் உதவி கம்பருக்குக் கிடைக்க வில்லை. அல்லது மன்னர் உதவியைக் கம்பர் பெறவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் காட்டுகின்றது. அவ்வாறான நிலைக்குக்காரணம்

யாதென்பதே இங்கு ஆயத்தக்கது. காரணம் யாதாக இருப்பினும் கம்பருக்கும் சோழமன்னருக்கும் நெருக்க உறவில்லைஎன்று மட்டும் துணிந்து நம்பலாம், உரைக்கலாம்.

தமிழ் நாவலர் சரிதையில் கம்பர் பாடியதாகச் சொல்லப்பெறும் சில தனிப்பாடல்கள் சில குறிப்புகளைத்தருகின்றன, இப்பாடல்களை ஒட்டியே தொண்டை மண்டல சதகமும் சோழமண்டல சதகமும் கம்பர் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

மேற்குறிப்பிட்ட நூல்கள் யாவற்றிலும் சோழமன்னருக்கும் கம்பருக்கும் நிலவிய இணக்கமிலா நிலையே முதன்மையாகக் கிடக்கின்றது. இவ்விணக்கமிலா நிலையின் முழுவெளிப்பாடாகவே,

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் — என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு

என்னும் கம்பர் பாடிய பாடல் அமைந்துள்ளது[2]

பகைக் காரணங்கள்

மிகச்சிறிய ஆலின் விதையில் மிகப்பெரிய ஆலமரம் அடங்கியிருப்பது போல் ஒவ்வொரு உயிருக்குள்ளும் ஒவ்வொரு தனி இயல்புகள் பதிவாகியுள்ளன. அவ்வகையிலேயே மக்கள் இனத்தின் உறுப்பினர்களாகிய ஒவ்வொரு மாந்தனும் உயிர்நிலையில் தனித் தனி இயல்புகளைக் கொண்டுள்ளான். உலகப்பெரும் பாவலராகிய கம்பர் பிறவியிலேயே பெரும் புலமைக்குரிய செல்விமிக்க உயிர் வளர்ச்சியைப்பெற்றிருந்தார் என்று எண்ணுதல் தவறாகாது. அளவிடற்கரிய கற்பனையாற்றலும் உலகை அஃகி யகன்று காணும் அறிவும் கொண்ட கம்பர், தம் தகுதிக்கேற்ப மன்னரிடத்து மதிப்பை எதிர்பாத்திருப்பார் என்றும் அது கிடைக்காத நிலையில் மன்னனை மதியாது சென்றிருப்பார் என்றும் நினைக்கலாம்.

மேலும் கம்பர் பிறந்த குலம் உவச்சர் குலம் என்று சொல்லப் பெறுகின்றது. காளி கோவிலுக்குப் பூசைசெய்வது இக்குலத்தாரின் தொழில். சாதிப் பிரிவுகளும் பூசல்களும் தலைவிரித்தாடிய அக்கால கட்டத்தில் சாதி நிலையாலும் கம்பருக்கு மதிப்புக் குறைவு நேர்ந்திருக்கலாம். கம்பருக்குப் பகைவராக இருந்தார் எனப்படும் ஒட்டக்கூத்தர் செங்குந்தர் என்னும் சிறிது உயர் வகுப்பினராக இருந்தார் என்பதும் இங்கு எண்ணத்தக்கது.

சாதிப்பூசல்

கம்பர் காலத்தில் 'தாதன்' என்றொரு புலவர் வாழ்ந்து வந்தார். இவர் சாதி சேர்த்து 'வாணியன் தாதன்' என்றே அக் காலத்து அழைக்கப்பட்டார். எவ்வகையாலோ கம்பருக்கும் இவருக்கும் பகையுண்டாகியிருக்கிறது. வாழும் வகையறிந்து இவர் ஒட்டக்கூத்தர் பக்கமாகியிருக்கலாம்.

கம்பரின் புலமை பற்றி இத் தாதன் என்னும் புலவரிடம் மன்னன் குலோத்துங்கன் கேட்கின்றான். அதற்குத்தாதன் என்னும் புலவர் கம்பர் எழுதிய 'மும்மணிக்கோவை' என்னும் நூலின் முதற்சீரே பிழையாக உள்ளதென்று சொல்லியிருக்கின்றார். பாடலில் குற்றம் இருப்பினும் அதனைத் தாதன் சொல்லிய முறையே இங்கு நோக்கத்தக்கது.

கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன் சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழை[3]

என்பதே பாடல். இங்கு 'கையால் கோயிலுக்கு மணியடிக்க மட்டுமே தெரிந்து யாப்புச் சீரறியாக் கம்பன் என்று சொல்லப்பெற்றுள்ளது.

பின்னொருகால் இத் தாதனுக்கு மன்னன் 'விருதுகாளம்' என்னும் பட்டமொன்றை கொடுக்கின்றான். அப்பொழுது கம்பர், தம்மைச் சாதி குறித்து இழித்துப் பாடிய தாதனுக்கா பட்டம் என்பதை மனத்தில் கொண்டு,

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பானங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படுமே[4]

எனது தாதனது செக்காடும் தொழிலைச் சார்த்தி இழித்துப் பாடி விட்டார்.

கம்பர் வாழ்வில் இந்நிகழ்ச்சி முற்பகுதியிலேயே நடந்திருக்க வேண்டும். அதாவது இராமாயணம் பாடும் முன்னர் என்பதாம். கம்பர் தம் காப்பியத்தைப் பாடியிருந்திருப்பாராயின் அவர் எப்பொழுதோ எழுதிய மும்மணிக் கோவையை வைத்துக்கொண்டு அதில் காணும் குறையைப் பெரிதுபடுத்திப் பேச யாரும் முயன் றிருக்க மாட்டார்கள். அத்துடன் யாரும் கேட்கவும் மாட்டார்கள்.

தாதன் உண்டாக்கிய அவமானகும் சோழ மன்னன் தம்மை மதியாமையும் ஆகிய நிலை கம்பர் மனத்தில் பெரிய மாறுதலை

உருவாக்க அவையே இராமாயணம் எழுத அடிப்படையாகி யிருக்க வேண்டும்.

ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை - பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவில் மாணாக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.[5]

என்று தாம் வழிபடும் ஒற்றியூர்க் காளியிடம் கம்பர் வேண்டியதாக ஒரு பாடல் பேசுகின்றது. இப்பாடலைப் பாடியபொழுது கம்பர் காப்பியம் எழுத முனைந்திருக்கின்றார் என்பதே தெரிகின்றது. காளி கோவில் மணியடிக்க மட்டுமே தெரியும் என்று தாதன் உரைத்த சொல் செவிசுடவே தன் வழிபடு தெய்வத்தின் முன் அது நினைந்து புலம்பியிருக்கின்றார் என்பதையே இப்பாடலால் அறிய முடிகின்றது.

விலை மகளிர் வழிப்பூசல்

கம்பருக்கு விலைமகளிர் உறவு இருந்ததென்பதைச் சில தனிப் பாடல்கள் தெரிவிக்கின்றன. கம்பருக்கும் மன்னருக்கும் பகை வளர்க்க முயன்ற புலவர் குழாம் கம்பருக்குப் பழக்கப்பட்ட பொன்னி யென்னும் விலைமகளிடம் சென்று கம்பரெழுதிய ஓலையொன்றை யும் பெற்றுவந்து மன்னனிடம் கொடுத்திருக்கின்றது. மன்னனும் கம்பரிடம் இவ்வோலையைக் காட்டி கருத்துக் கேட்டிருக்கின்றான்[6]. இதன் வழியாகவும் இருவருக்கும் பகை வலுத்திருக்கின்றது

அம்பிகாபதி–அமராவதிப்பூசல்

கம்பர் மகன் அம்பிகாபதியும் சோழன் மகள் அமராவதியும் ஒருவரையொருவர் காதலித்தனர் எனவும் இதனால் அம்பிகாபதியை ஒட்டக்கூத்தரின் அறிவுரைப்படி சோழன் கொன்றான் எனவும் தமிழ் நாவலர் சரிதை தெரிவிக்கின்றது. சாதிப்பிளவுகள் பள்ளத் தாக்குகளாக விரிந்திருந்த காலத்தில் முன்பே சில பல நிலைகளால் பகைவராயிருந்த கம்பரை நன்றாகப் பழிவாங்கச் சமயமொன்று வாய்ந்ததாகவே அம்பிகாபதிக் கொலையைக் கருதவேண்டியிருக்கிறது.

கம்பர் கூட, தன் மகனின் செயலுக்கே மிக வருத்தியதாகத் தெரிகின்றது.

இந்நாள் இதுவினையும் என்றெழுத்துத் தானிருக்க
என்னாலே யாவதொன்றும் இல்லையே – உனாலே

வந்துதான் அப்பா மகனே தவிர்ப்பவரார்
முந்தையில் நீ செய்தவினை யே[7]

என்றும், வெட்டுப்பட்டாய் மகனே தலைநாளின் விதிப்படியே[8] என்றும் மகனின் பிரிவு நினைந்து பாடியதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

கம்பரையும் மன்னன் கொன்றானா?

பிறிதொரு நிகழ்ச்சியின் போது கம்பரையும் குலோத்துங்கன் அம்பெய்து கொன்றான் எனவும் அப்பொழுது,

வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டே
வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம் – வில்லம்பு
பட்டதடா என்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்[9]

என்று கம்பர் பாடினார் எனவும் தமிழ் நாவலர்சரிதை கூறும். இப்பாடல் கம்பர் தனது மகனுக்கு நேர்ந்த கொடுஞ்செயலை நினைந்து கலங்கி அவன் மார்பு மீது பட்ட அம்பைத் தன்மீது பட்டதாக ஏற்றிப்பாடியதாகவே கொள்ளவேண்டும். நேரடியான பிழையொன்றும் கம்பர் மன்னன்பால் செய்யவில்லை யாதலால் கம்பரை மன்னன் கொல்ல வேண்டிய தேவையில்லை. மேலும் கம்பருக்குப் பகையாயிருந்த வாணியன் தாதன் என்ற புலவரே கம்பர் இறந்த போது,

இன்றோநங் கம்பன் இறந்தநா ளிப்புவியில்
இன்றோதான் புன்கவிகட் கேற்ற நாள் – இன்றோதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள்[10]

என்று பாடியதாக ஒரு பாடல் கிடைக்கின்றது. மன்னனே கம்பரைக் கொன்றிருந்தால் மன்னனைச் சேர்ந்திருந்த தாதன் இப்பாடலைப் பாடியிருக்க முடியாது. எனவே கம்பர், காப்பியம் எழுதி முடித்த பிறகு பின்னொருகால் இயற்கையாக இறந்தபோது அவரின் பேராற்றல் மிக்க பெருங்காப்பியத்தைப் பார்த்துவிட்டு மனம் திருந்தி அதனால் 'தாதன்' இப்பாடலைப் பாடினார் என்று கொள்வதே பொருத்தமாகும்.

ஆதரவற்ற தனிப்பயணமும் சடையப்ப வள்ளலின் ஆதரவும்

தனி நிலையிலும் குடும்ப நிலையிலும் பெருந்தோல்வியைக்

கண்ட கம்பர் மனம் வெந்து சோழநாட்டில் இருக்கவே கூடாது என்று முடிவெடுத்து கொங்குநாடு, பாண்டிநாடு ஆகிய இடங்கட்கெல்லாம் சென்று அலைந்திருக்கின்றார் இதனை அவர் பாடியதாகச் சொல்லப்படும் புலதனிப்பாடல்கள் தெரிவிக்கின்றன.[11]

பாண்டிய மன்னனின் அவையில் கம்பர் கடைசியாகச் சென்று சேர்ந்திருக்கின்றார். இவ்வேளையில் கம்பரின் அளவிலாப் பெரும் புலமையை அறிந்து வைத்திருந்த சடையப்ப வள்ளல், அவலத்தின் கொடுமுடியாகப் போய்விட்ட கம்பரை அழைத்து வந்து அமைதியாக வாழவைக்க வேண்டுமென்றும் அவரின் பெரும்புலமையை உலகறியச் செய்யவேண்டும் என்றும் முடிவு கொண்டு துணிந்து தம் தம்பியை ஏவிக் கம்பரை அழைத்துவரச் செய்திருக்கின்றார். பாண்டியன் அவையில் இருந்த கம்பரை அழைக்கச் சென்ற வள்ளலின் தம்பியை இவர் யாரென்று பாண்டியன் கேட்க,

என்னுடைய தம்பி சரராமனுக் கிளையான்
கண்ணன் மதயானைக் கண்டன்மன் — துன்னு
பணையார்நீர் வேலிப் பழனஞ்சூழ் சோணாட்
டிணையார மார்ப னிவன்[12]

என்று கப்பர் பாடியதாக ஒரு பாடல் கிடைக்கின்றது. இப்பாடல் சோழன் கம்பரை அழைத்துவர சடையப்ப வள்ளலின் தம்பியை அனுப்பியபோது பாடியதென்பர். வரலாற்று நோக்கில் அவ்வாறு கொள்வது பொருத்தமாகப் படவில்லை.

காப்பிய மாளிகை கட்ட எழுத்தாணி யேந்தல்

தம்கால மன்னரால் அவமதிப்பு பெற்றுக் குடியழிந்து, சின்னஞ் சிறு குறும்புலவர்கள் சூழ்ச்சியில் மொத்துண்டு மனங்குமைந்த கம்பர்க்குச் சடையப்ப வள்ளலின் ஆதரவு புதியவாழ்வே யாகும். அவ்வுதவியை உள்ளமே பெருங்கோயிலாகக் கொண்ட கம்பர் எப்படி நினைத்துப் பூரித்திருப்பார் என்பதை எண்ணும் பொழுதுதான் காப்பியத்தில் கங்கையும் கடாரமும் கொண்ட வழித் தோன்றல்களைத் தூர எறிந்துவிட்டு எளிய சடையப்ப வள்ளலை ஏற்றிய தன்மாட்சி தெரியவரும்.

அவையடக்கம் பாட எழுத்தாணி ஏந்தியதிலிருந்து யுத்தகாண்டத்து விடைகொடுத்த படலத்தின் கடைசிப் பாடலை எழுதி முடிக்கும்வரை கம்பர் தம் வாழ்வில் வீசிய புயல்களையும் கக்கிய எரிமலைப் பிழம்புகளையும் மறக்கவே இல்லை.

வையமென்னை யிகழவும் மாசெனக் செய்தவும்
நொய்தின் நொய்யசொல் நூற்க லுற்றேன் [13]

எனவும்,

முத்தமிழ்த்துறை முறையின் போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ [14]

எனவும் அஞ்சொல் நுண்தேர்ச்சிச் செந்நாப் போதராகிய கம்பரே தம் பாடலைப் பாடுவாராயின் அது தம்மையிகழ்ந்த புலவர் குழாத்தை நினைத்து எழுதிய அழுகை வரிகளேயாகும்.

காப்பியத்தின் முதற்பெருமை

கம்பரின் காப்பியச் சிறப்புக்கள் பன்னூற்றுக் கணக்கின எனினும் அவற்றுள் முதலாவதாக மதிக்கத் தக்க சிறப்பு அவரமைத்த அரசின் இலக்கணமேயாகும்.

இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று [15]

என்று தெய்வப்புலவரே பாடியபொழுது,

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை மாதோ [16]

என்று கம்பர் புரட்சிக் கனவு கண்டு பாடினார் எனின் அதற்குக் காரணம் தம்கால அரசுமீது அவர் செலுத்திய பார்வையேயாகும்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் [17]

என்று பாடிய ஈராயிரம் ஆண்டுகட்கு முந்தைய மரபைப் பின் வந்த கொங்கு வேளிரும்[18], தோலாமொழித் தேவரும்[19], திருத்தக்க தேவரும்[20], சேக்கிழாரும்[21], பரஞ்சோதி முனிவரும்[22] கிளிப்பிள்ளை போல் சொல்லிக்காட்ட கல்வியிற் பெரிய புரட்சிப் பாவேந்தர் கம்பரோ,

வையம் மன்னுயி ராக அவ்வுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன் [23]

என்று முந்தைய மரபுகளைப் பெயர்த்துத் தூர எறிந்தாரெனின் அது சோழப் பேரரசு மீது எழுந்த வெறுப்பில் விளைந்த வொன்றே யாகும்.

அம்பிகாபதி மீது பாய்ந்த அம்பு

சோழப்பேரரசு மீதிருந்த வெறுப்பு, காப்பியத்தில் புரட்சிக் கருத்துக்களாகப் பதிந்தாங்கே அம்பிகாபதி மீது குலோத்துங்கன் பாய்ச்சிய அம்பும் சில புரட்சிக் கருத்தினைப் பதித்துள்ளது.

பாட்டன் வீட்டில் பரத சத்துருக்கர் இருந்தபோதுதான் இராமன் காடேகும் நிலைக்கு ஆளானான். இராமன் காடேகிய பிறகு அயோத்தி வந்த பரதன் நடந்ததறிந்து இராமனை அழைத்து வந்து ஆட்சியேற்ற ஆயத்தமாகின்றான் அயோத்திப் படையுடன் கானகம் வந்த பரதனைக் கண்ட இராமனின் தோழன் குகன், பரதன் இராமனைக் கொல்லவே வருகிறான் என்று தவறாகக் கருதிக் கொண்டு வீரவுரை பகர்கிறான். அப்பொழுது,

> *''மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம்*
> *வாயாவோ''*[24]

என்னும் பாடலும் ஒன்றாகும்.

தமிழிலக்கிய வரலாற்றிலேயே இந்த அளவிற்கு வல்லாளுமையை எதிர்த்து முழக்கமிட்ட வரியொன்றினைக் காணவே முடியாது. திருவள்ளுவர் கூட,

> *ஏந்திய கொள்கையர் சீறின் இடைமுறிந்து*
> *வேந்தனும் வேந்து கெடும்*[25]

என்றுதான் கூறினார். ஆயின் கவிச்சக்கரவர்த்தியோ,

மன்னவர் நெஞ்சினில் வேடர்விடும் சரம் வாயாவோ என்று கேட்கின்றார் எனின் அது பாதிக்கப்பட்ட நெஞ்சின் எழுச்சிவரி என்பது தெரியவில்லையா?

காப்பியத்தில் எந்தக் 'கதைமாந்த' ராயினும் கம்பர் அங்காங்கே அவரவராக இருந்து பாடவல்லவர் என்பதை அவர்தங் காப்பியம் கற்றோர் அறிவர். சில காப்பியக் களங்கள் கம்பரின் சொந்தக் களமாகவே அமைந்துவிடுவதுண்டு. அத்தகைய களங்களில் மகன் இந்திரசித்தை இழந்த இராவணன் புலம்புகின்ற களமும் ஒன்றாகும்

சோழ மன்னன் மதியாத பொழுது கம்பர் ஆந்திராவில் ஆட்சி செய்த ஓரங்கல் நாட்டு மன்னன் பிராதாபருத்திரன் என்பானைக் கண்டு தன் புலமையை எடுத்தியம்பி அதன்வழி மிகப்பெரிய பெருமை பெற்றார் என்று தமிழ் நாவலர் சரிதை பேசும். 26 பிராதாபருத்திரன் சோழநாட்டிற்கே வந்து கம்பருக்கு அடைப்பைக்

காரணமாக இருந்தான் என்பர்.[27] சோழ மாமன்னன் மீது கொண்ட சினத்தைக் கம்பர் இதன்வழி தீர்த்துக்கொண்டார் என்பதை நம்பவே வேண்டியிருக்கிறது.

கம்பர் தம் காப்பியத்தில் கானல்நீர் எனப்பொருள்படும் 'மசரதம்' என்ற சொல்லையும், 'தாமரை'எனப்படும் 'தம்மி' என்ற சொல்லையும் 'நெருப்பு' எனப்படும் 'கிச்சு' என்ற சொல்லையும் அக்கட என்னும் வியப்படைச் சொல்லையும் தெலுங்கிலிருந்து கையாண்டிருக்கின்றார்.[28]

அவ்வகையில் சோழ மன்னனை எதிர்த்தும் தம்மால் வாழ முடிந்தது என்பதும் கம்பருக்கு ஓர் ஆறுதலாகவே இருந்தது. ஆயினும் தம் மகன் இறந்தநினைவு காப்பியத்தில் மகனையிழந்து புலம்பும் இராவணனது புலம்பலொடு சேர்ந்துகொண்டு கதறவே செய்கின்றது.

சினத்தொடு கொற்றம் முற்றி இந்திரன் செல்வம்மேவி
நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை யொருத்திநீரால்
எனக்குநீ செய்யத் தக்க கடனெலாம் ஏங்கியேங்கி
உனக்குநான் செய்வதானேன் என்னின்யார்
உலகத்துள்ளார்[29]

இது இராவணன் உருவில், மகனிழந்த கம்பரின் புலம்பலேயாகும். காப்பியக்கதைப் போக்கில் இராவணனுக்கு இப்பாடல் பொருந்து வதை அனைவரும் அறிவர். ஆயின் கம்பருடைய வாழ்வே இது வென்பதை எண்ணியிரார். சோழமன்னனுடன்

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு

என்று முழக்கமிட்டு ஓரங்கல் சென்ற நான் இந்திரனைப் போல் செல்வம் பெற்று மதிப்புப் பெற்று நினைத்ததை முடித்து நின்றேன். ஆயின் என்னருமை மகன் அம்பிகாபதியே, நீயோ ஒரு பெண்ணின் காரணமாக எனக்கு நீ செய்யத்தக்க கடனைச் செய்யாதவாறு போய் விட்டாய். அதனால் உனக்கு நான் கடமை செய்ய உரியனாயினேன்' என்பதே அப்பாடலின் உட்பொருளும் இறைச்சியுமாகும்.

முடிப்புரை :

உலகப் பெருந்தலைவர்கள், அறிஞர்கள் ஆகியோர் வாழ்வி லெல்லாம் அவர்களின் முற்பகுதியில் நடந்த சில நிகழ்ச்சிகளே பிற்

பகுதியின் பெருவெற்றிகட்கு அடிப்படையாகியுள்ளன. உலகத் தலைவர்களின் உச்சாணிக்கொம்பில் வீற்றிருக்கும் லெனின் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகளே அவரின் பெருவெற்றிக்கு அடிப்படையாகி இருக்கின்றன என்பதை மட்டும் இரு சான்று களுடன் இங்கு நினைக்கலாம்.

லெனின் வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்தவர்கள் லெனினைப் பற்றி உசாவுகையில் கோயிலுக்கெல்லாம் பையன் ஒழுங்காக வருகின்றானா என்று கேட்கின்றனர். அதற்கு லெனின் தாயார் 'அதுதான் ஒழுங்காக வரமாட்டேன் என்கின்றான்' என்று விருந்தினரிடம் சொல்லியிருக்கின்றார். அதைக்கேட்ட விருந்தினர் 'அப்படியா! கோயிலுக்கு ஒழுங்காக வரவில்லையா ? அப்படியானால் பையனை நன்றாகச் சவுக்கால் அடியுங்கள் ; அப்பொழுதுதான் சரிப்பட்டு வருவான்' என்றிருக்கின்றனர். இந்நிகழ்ச்சியின் போது சிறுவனாயிருந்த லெனின் அருகிலிருந்து கேட்டுக்கொண்டே இருக்கின்றார். சவுக்கால் அடிக்க வேண்டும் என்று சொன்ன அளவிலேயே லெனின் வீட்டைவிட்டு வெளியே ஓடி நின்றுகொண்டு 'கோயிலுக்கு வரவில்லை என்றால் சவுக்கால் அடிப்பீர்களா ? அடிப்பீர்கள் இதோ பாருங்கள் நமக்கும் கடவுளுக்கும் இனி எந்தத் தொடர்பும் கிடையாது என்று உரக்கச் சொல்லிக்கொண்டு கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சிலுவையை அறுத்து வீசியெறிந்தாராம். லெனின் பிற்கால வீரஞ் செறிந்த பெருமித வாழ்வுக்கு அடிப்படையாக அவரின் சிறு அகவை வாழ்வே சான்றாகியிருக்கின்றதென்று அறியமுடிகின்றது[30]. மேலும் அவரின் அருமை அண்ணன் அலெக்சாண்டர் என்பவரை ஜார் மன்னன் தூக்கிலிட்டவன் கொடுஞ்செயல் அக்கொடுங்கோலரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற உணர்வை லெனினிக்கு[31] நல்கியது என்பதையும் இங்கு நினைப்பது பொருத்தமாகும்.

பெரிய வெள்ளம் அடித்த பிறகே வயல்கள் வண்டல் படிந்து நன்கு விளையும். மாந்த வாழ்வென்பதும் அப்படித்தான் ! மெல்லிய கனிவாகச் சாம்பல் படிந்து கிடக்கும் கொழுங்கனலைப் பொருத்தமான சில நிகழ்ச்சிப் புயல தீண்டிவிடும். அப்பொழுது யாராலும் பக்கத்தில் நிற்கமுடியாது. வரலாறு படைத்த சான்றோர்களும் தலைவர்களும் அப்படி இயங்கியவர்களே ! அவர்கள்தான் வரலாற்றைப் படைப்பவர்கள் ! அவர்கள் தான் வரலாற்றில் நிற்பவர்கள் ; ஆம் ! கம்பரும் அப்படிப்பட்ட புயல் வீச்சில் அகப்பட்டுச் சிக்கித் தவித்து எழுந்து நின்றவர்தான் ! அதனால்தான் இப்படிப்பட்ட காப்பியத்தை அவரால் செய்ய முடிந்தது.

மேற்கோள் நூல்கள்

1. கலிங்கத்துப்பரணி, பக். 101-102, புலியூர்க்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை 1979
குலோத்துங்க சோழனுலா, பக். 27 [illegible], கழகம், 1970.
2. தமிழ் நாவலர் சரிதை, பக்கம். 79, கழகம், 1972.
3. ,, ,, 88, ,, ,,
4. ,, ,, 74, ,, ,,
5. ,, ,, 84, ,, ,,
6. தனிப்பாடல் திரட்டு (முதற்பகுதி), ப. 99, கழகம் 1969
7. ,, ப. 105. ,, ,,
8. ,, ப. 105, ,, ,,
9. ,, ப. 107, ,, ,,
10. தமிழ்நாவலர் சரிதை. ப. 89.
11. தனிப்பாடல் திரட்டு (முதற்பகுதி), பக் 99—101.
12. தமிழ் நாவலர் சரிதை, ப. 77.
13. கம்பராமாயணம் பாலகாண்டம் தற்சிறப்புப்பாயிரம் பாடல் 5, வை. மு. கோ, சென்னை, 1973 பாடல் 8,
14. ,, ,,
15. திருக்குறள் 1058
16. கம்பராமாயணம், பாலகாண்டம், பாடல் 167 வை. மு. கோ, சென்னை.
17. புறநானூறு, பாடல் 186
18. பெருங்கதை, 2. 11 : 17—18
19. சூளாமணி நகரப் படலம், பாடல் 16.
20. சீவக சிந்தாமணி, பாடல் 2908.
21 பெரியபுராணம், திருநகரப்படலம், பாடல் 14
22. திருவிளையாடற்புராணம், பழியஞ்சினபடலம், பாடல் 44,
23. கம்பராமாயணம், பாடல் 1423, கம்பன்கழகம் சென்னை 1977.
24. கம்பராமாயணம், பாடல் 2319, கம்பன், கழகம், சென்னை1977
25. திருக்குறள், 899
26 தமிழ் நாவலர் சரிதை. ப. 79
27. அபிதான சிந்தாமணி ப. 348, Asian Educational Service, New Delhi 1981.
28. எஸ். வையாபுரிப்பிள்ளை, கம்பன்காவியம், பக் 14-15. தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1965.
29. கம்பராமாயணம், பாடல், 9224, கம்பன்கழகம், சென்னை1977
30 வி. கி. லெனின் சுருக்க வரலாறு ப.
31. ,, ப.

கரந்தைச் செப்பேட்டுச் செய்திகளால் அறியப்பெறும் வளநாடுகளும் ஊர்களும்

பேராசிரியர் **சி. கோ. தெய்வநாயகம்**

முதல் இராசேந்திரனிடத்து நிலதானம் பெற்ற ஆயிரத் தெண்மர் வேதபிராமணர்களின் பெயர்களையும் செப்பேட்டுத் தொகுதியின் மூன்றாம்பகுதி, முப்பது செப்பேடுகள் விளக்குகின்றன. அவர்கள் சோழமண்டலத்தில் வாழ்ந்திருந்த ஊர்களைக் குறிப்பிடும்போது, சாசன விளக்கமாக அவ்வூர் அமைந்த கூற்றம், நாடு, வளநாடு ஆகியவற்றுடன் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, இச்செப்பேடுகளில் கூறப்பெற்றிருப்பதால், சோழ மண்டலத்தின் உட்பிரிவுகளைத் தெளிவாக அறிய முடிகின்றது. முதல் இராசராசனது கால அளவு வகையில் கிடைத்திருந்த வளநாடுகள் ஒன்பதாகும். (பிற்காலச் சோழர் சரித்திரம்-பக்-130) அவை 1. அருண்மொழிதேவ வளநாடு 2. சத்திரிய சிகாமணி வளநாடு 3 உய்யக்கொண்டார் வளநாடு 4. நித்த விநோத வளநாடு 5. பாண்டிய குலாசனி வளநாடு 6. கேரளாந்தக வளநாடு 7. இராசாசிரிய வளநாடு 8. இராராச வளநாடு 9. இராசேந்திர சிங்க வளநாடு என்பனவாகும். (பி சோ. ச. பக் 123. பண்டாரத்தார்)

இவ்வளநாடுகள் சோழமண்டலத்தின் நான்கு எல்லைகளாகக் குறிக்கப்பெறும், (கிழக்கே) வங்கக்கடல், (தெற்கே) தென் வெள்ளாறு, (மேற்கே) கோட்டைக்கரை, கருவூர், (வடக்கே) வடவெள்ளாறு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பெருநிலப்பரப்புக் குட்பட்டனவாகும். மண்டலத்தின் ஒன்பது பிரிவுகளாக முதல் இராசராசன் தனது 16-ஆம் ஆட்சியாண்டில், குரவன்உலகளந்தான் இராசராச மாராயன் தலைமையில் நாட்டளவை செய்து பிரித்துள்ளான். (பி சோ. சரித்-பக் 129)

அந்நிலப் பிரிப்பின்படி சோழமண்டலம் வளநாடுகளாகவும், வளநாடு நாடுகளாகவும், நாடு கூற்றங்களாகவும், கூற்றம் ஊர்கள் அல்லது சதுர்வேதி மங்கலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்துள்ளன.

இவ்வாறு பிரிக்கப்பட்ட உட்பிரிவுகளை அறிதற்கு முதல் இராசராசன் காலமுதலாக ஆட்சி செய்த சோழமன்னர்களின் கல்வெட்டுச் செய்திகளில் குறிக்கப்படும் வளநாடு, நாடு, கூற்றம், ஊர்கள் ஆகியவற்றைக் கொண்டு வரலாற்றாசிரியர்கள் ஓரளவு

குறித்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக, நித்தவினோத வளநாட்டைப் பற்றி அறிய முயன்றால், அவ்வளநாடு, கும்பகோணம், மன்னார்குடி, தஞ்சை ஆகிய வட்டங்களின் பக்க இணைப்பாக அரிசிலாற்றுக்குத் தெற்காக அமைத்ததும், ஆவூர்க் கூற்றம், இரும்புதல் ஆகிய ஊர்களைக் கொண்டதும் ஆகும் என்ற அளவிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

செப்பேடுதரும் — பிரிவுகள்

கரந்தைச் செப்பேடுகளில் குறிக்கப்பெறும் சோழமண்டலத்தின் உட்பெரும் பிரிவுகளாகிய வளநாடுகள் முன்னர் குறிக்கப்பெற்ற ஒன்பது வளநாடுகளுடன், கடலடையாது இலங்கை கொண்ட சோழவள நாடென்னும் கோனாட்டுப் பகுதியும் சேர்ந்து பத்தாகக் காணப்படுவது சிறப்பான செய்தியாகும்.

ஒவ்வொரு வளநாட்டிலும் அடங்கிய நாடுகளும், கூற்றங்களும், ஊர்களும், சதுர்வேதி மங்கலங்களும் இதுவரையில் கிடைத்திருப்பதை விட மிகுதியாகவே காணப்படுவதால், வளநாடுகளின் எல்லைகளை முன்னையினும் ஓரளவு தெளிவாக அறிதற்கு உதவியாக அமைந்துள்ளது. இதுவரையில் வெண்ணிக்கூற்றம் எவ்வள நாட்டைச் சேர்ந்ததென்பதில் ஏற்பட்டிருந்த ஐயம் தெளிவுபெற, வெண்ணிக்கூற்றம் நித்தவிநோத வளநாட்டின் கூற்றப்பகுதிகளில் சிறந்ததொன்றென்பதுடன், இக்கூற்றத்துள், ஸ்ரீபூதி, ஒளிமதி ஆகிய ஊர்களுடன் பூவனூராகிய அவநிகேஸரி சதுர்வேதிமங்கலம், கீழைப் பூண்டியாகிய ஓலொக மஹாதேவிச் சதுர்வேதிமங்கலம், ஆகிய சதுர்வேதிமங்கலங்களும் அடங்கியிருப்பதை இச்செப்பேடுகள் தெளிவு செய்கின்றன. மற்றும், சோழமண்டலத்தில் கி. பி. பதினோராம் நூற்றாண்டில் அமைந்திருந்தனவும், சோழ மன்னர்கள் பெயராலும், சோழவரசியர் பெயராலும் பிறசிறப்புப் பெயராலும் விளங்கியனவுமாகிய நாற்பத்துநான்கு சதுர்வேதி மங்கலங்களின் பெயர்களை அறிந்து, கொள்ள முடிகின்றது.

திருவாரூர்க் கூற்றத்திலுள்ளதும் இன்று பிழையாக 'அடியக்காமங்கலம்' என்று அழைக்கப்படுவதுமாகிய ஊரின் திருந்திய பெயர் 'அடியப்பிமங்கலம்' என்பதும், தண்டத்தோட்டம், மும்முடிச்சோழச் சதுர்வேதிமங்கலம் என்பதும், நித்தவிநோத வளநாட்டு இரும்புதல் மந்ரகுல ஆடாமணிச் சதுர்வேதிமங்கலம் என்பதும், காமரசவல்லி, மிறைக்கூற்றத்துச் சதுர்வேதிமங்கலம் என்பதும் இச்செப்பேடுகளால் அறியப்பெறுவனவாகும்.

இந்நிலையில் பகுப்பு நிலையில் உணரத்தக்க வகையில் கரந்தைச் செப்பேடுகள் காட்டும் ஒன்பது வளநாடுகளும் அவற்று ளடங்கிய நாடு, கூற்றம், ஊர் ஆகிய செய்திகளைக் கீழ்வருமாறு காணலாகும்.

1. அருமொழி தேவ வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
புறங்கரம்பை நாடு —	—	செம்பியன் மாதேவிச் சதுர் வேதிமங்கலம்
,,	—	சிங்களாந்தகச் சதுர்வேதி மங்கலம்
,,	—	கோதண்டராமச் சதுர்வேதி மங்கலம்
,,	—	பனையூர்
,,	—	பல்லவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	—	பெரும்பல மருதூர்
,,	வண்டாழை வேளூர் கூற்றத்து	கொண்ணூர்
,,	,,	குறும்பில்
,,	,,	வல்லமாகியவிடேல்விடுகுச் சதுர்வேதி மங்கலம்
,,	,,	செம்பியன் மஹா தேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	,,	கீழயில் பரமேஸ்வர மங்கலம்
இடையள நாடு	—	அறிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம்
,,	—	குந்தவைச் சதுர் வேதி மங்கலம்
முழையூர் நாடு	—	நாட்டுக்கடுவன் திடலாகிய பரமேஸ்வர மங்கலம்
,,	பலிவலக் கூற்றத்து	கன்றாப்பில்
,,	,,	இறையான் குடி
தக்களூர் நாடு	—	அத்திகோச மங்கலம்
,,	—	தாழைக்குடி
இங்கணாடு	—	நெற்குப்பை
,,	—	விபலசித்த மங்கலம்

நாடு	கூற்றம்	ஊர்
தேவூர் நாடு	—	கிள்ளிகுடி
,,	—	மாரக்க மங்கலம்
,,	ஆர்வலக் கூற்றத்து	கொற்றங்குடி
நென்மலி நாடு	—	ஆராற்றூர்
,,	—	குன்றியூர்
,,	—	நெடுமணலாகிய மதன மஞ்சரிச் சதுர்வேதி மங்கலம்

ஆக, நாடு–7, கூற்றம்–3, ஊர்-17, ச.மங்கலம்–9

2. க்ஷத்ரிய சிகாமணி வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
பாம்பூர் நாடு	—	மாங்குடி
திருநறையூர் நாடு	—	சீதொங்கமங்கலம்
,,	சேற்றூர் கூற்றத்து	சேற்றூர்
,,	—	நாலூர்
,,	—	குடவாயில்
வேளார் நாடு	—	ராஜமல்ல சதுர்வேதி மங்கலம்
,,	—	விளங்குடி
,,	,,	விளமாசி
,,	திருவர்ருர் கூற்றத்து	குருக்கத்தி
,,	—	அடியப்பிமங்கலம்
மருகல் நாடு	—	பிராய்குடி
,,	—	இடையாற்றுக்குடி
தேவூர் நாடு	—	ஆலத்தூர்
முழையூர் நாடு	—	குந்தவைச் சதுர்வேதி மங்கலம்
,,	—	சாத்தமங்கலம்
பனையூர் நாடு	—	பூலோக மாணிக்கச் சதுர் வேதி மங்கலம்
,,	—	மூலமங்கலம்
,,	—	எயினனூர்

நாடு	கூற்றம்	ஊர்
அள நாடு	—	அத்திப்புலியூர்
,,	பட்டனக் கூற்றத்து	கொட்டாரக்குடி
,,	—	சன்னமங்கலம்

ஆக-நாடு-8, கூற்றம்-3, ஊர்-19, ச. மங்கலம்-3.

3. உய்யக்கொண்டார் வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
திருநறையூர் நாடு	—	தண்டந்தோட்ட மானமும் மடிச் சோழச்சதுர்வேதி மங்கலம்
பரம்பூர் நாடு	—	கடையக்குடி
,,	—	திருக்குடமூக்கு
அம்பர் நாடு	—	ஆலத்தூர்
,,	—	சிறுபுலியூர்
,,	—	பேழைக்குடி
,,	—	வேலங்குடி
வெண்ணாடு	—	வைகலாகிய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	—	திருமிழலை
திரைமூர் நாடு	—	வண்ணக்குடி
திருவழுந்தூர் நாடு	—	உத்தமசோழச் சதுர்வேதி மங்கலம்
,,	—	அக்களூர்
,,	—	விழலாகிய வானவ மங்கை
குறும்பூர் நாடு	—	காயாக்குடி

ஆக—நாடு-7, ஊர்— 1, ச. மங்கலம்-3.

4. நித்த விநோத வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
—	ஆலூர் கூற்றத்து	அமிதிரவல்லிச் சதுர்வேதி மங்கலம்

நாடு	கூற்றம்	ஊர்
—	,,	நரசிங்கமங்கலம்
—	,,	இரும்புதலாகிய மந்ரகுல ஆடாமணிச் சதுர்வேதி மங்கலம்
முடிச்சோணாடு	—	ஜநநாதச் சதுர்வேதி மங்கலம்.
,,	வெண்ணிக்கூற்றத்து	ஒளிமதி
,,	,,	பூவணூராகிய அவநி கேஸரி சதுர்வேதி மங்கலம்
,,	,,	கீழைப்பூண்டியாகிய ஒலொக மஹாதேவிச் சதுர் வேதி மங்கலம்
நல்லூர் நாடு	—	ராஜகேஸரி சதுர்வேதி மங்கலம்

ஆக : நாடு—3, கூற்றம்—2, ஊர்—3, ச. மங்கலம்—7.

குறிப்பு : நித்தவிநொதவளநாட்டில் வெண்ணிக் கூற்றம் அடங்கியுள்ளமை வரலாற்றில் புதிய செய்தியாகும்.

5. பாண்டிய குலாசனி வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
புறக்கிளியூர் நாடு	—	மலையக்கச் சதுர்வேதி மங்கலம்
,,	—	மாறனேரியான தென்னவன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலம்
இடையாற்று நாடு	—	தொண்டவைச் சதுர்வேதி மங்கலம்
,,	—	இடையாற்று மங்கலம்
எயினாடு	ஆர்க்காட்டுக் கூற்றத்து	சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்
விளர்நாடு	—	உத்தமசீலிச் சதுர்வேதிமங்கலம்
,,	—	மலரியான ஸ்ரீகணச் சதுர்வேதி மங்கலம்

நாடு	கூற்றம்	ஊர்
,,	—	மீகோழைச் சோழ மகாதேவிச் சதுர் வேதிமங்கலம்

ஆக : நாடு—4, கூற்றம்—1, ஊர்—1, ச. மங்கலம்—7

6. கேரளாந்தக வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
—	உறையூர் கூற்றத்து	ராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலம்
—	,,	நங்கை பிர்ஹ்ம தேயமான அறிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலம்

ஆக : நாடு—, கூற்றம்—, ச. மங்கலம் 2.

7. ராஜாஸ்ரய வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
முஞ்ஞுஇவல்லவாயா நாடு	—	தனியூர் வெள்ளறை
,,	—	உத்தமசோழச் சதுர்வேதி மங்கலம்
,,	பாச்சில்கூற்றத்து	கீழபாலாற்றுப் பெருமருதூர்
,,	காலாற்கூற்றத்து	திருபங்கலம்
,,	வெள்ளலையூர்க் கண்டம்	சங்கேந்தி மங்கலம்

ஆக: நாடு—1, கூற்றம்—3, ஊர்—4, ச. மங்கலம்—1.

8. ராஜராஜ வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
களக்குடி நாடு	—	மாநநிலைநல்லூர்

ஆக : நாடு–1, கூற்றம்–1, ஊர்–1, ச. மங்கலம்.

9 ராஜேந்திர சிம்ஹ வளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
பொய்கை நாடு	—	வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம்
,,	—	கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம்
,,	—	மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம்
,,	மிறைக் கூற்றத்து	காமரசவல்லி சதுர்வேதி மங்கலம்
இன்னம்பர் நாடு	—	பழைய வானவன் மஹா தேவிச் சதுர்வேதிமங்கலம்
,,	—	ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதி மங்கலம்
,,	—	கிழக்கூர்
,,	—	மிழலை இரட்டுச் சேய்ஞலூர்
மண்ணி நாட்டு	—	ஏமநல்லூர்
,,	—	இடையரி நல்லூர்
,,	—	வேப்பற்றூரான சோழ மாத்தாண்ட சதுர்வேதி மங்கலம்
,,	—	முள்ளிலங்குடி
,,	—	இடவை
,,	—	வீரத்துார்
காரகில் நாடு	—	யேமான் புலியூரான உல களந்த சோழச் சதுர்வேதி மங்கலம்
திருவிந்தளூர் நாடு	—	சேந்தன்குடி
,,	—	திருநின்றியூர்
,,	—	மார்ப்பிடுகு தேவிச் சதுர் வேதி மங்கலம்
குறுக்கை நாடு	—	கடலங்குடி
,,	—	காவிரிமங்கலம்
அதிகை மங்கை நாடு	—	பெருந்தோட்டம்
திருக்கழுமல நாடு	—	உதயாதித்த மங்கலத்து கஞ்சனூர்

நாடு	கூற்றம்	ஊர்
,,	—	மகேந்திர கோட்டூர்
நாங்கூர் நாடு	—	குன்றத்தூர்
,,	—	மருதூர்
,,	—	தனியூர்பெரும்பற்றபுலியூர்
வெண்ணையூர் நாடு	—	சோதியக்குடி
,,	—	பஞ்சவன் மஹாதேவிச் சதுர் வேதிமங்கலம்
,,	உகளூர்க் கூற்றத்து	திட்டைக்குடி
,,	,,	வேசாலிப்பாடி ஐயங் கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலம்
,,	—	இருங்கோளப்பாடித் தனியூர் வளவன் மஹா தேவிச்சதுர்வேதி மங்கலம்

ஆக: நாடு—10, கூற்றம்-2, ஊர்-19, ச.மங்கலம்-12

10. கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாடு

நாடு	கூற்றம்	ஊர்
கோனாடு	உறத்தூர் கூற்றத்து	கற்றளியேரியான விக்ரம கேஸரி சதுர்வேதி மங்கலம்
,,	சூரலூர் கூற்றத்து	சோழ உத்தம சதுர் வேதி மங்கலம்

ஆக: நாடு-1, கூற்றம்—2, ஊர்—, ச.மங்கலம்-2

பாழடைந்து கிடக்கும் பழையாறைத் திருக்கோயில்

டாக்டர். இரா. கலைக்கோவன்.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் பதினோரு கிலோமீட்டர் தொலைவில், திருமலைராசன் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. வரலாற்றுப் புகழ்பெற்ற பழையாறைத் திருநகர், சம்பந்தராலும் அப்பராலும் பழையாறை என்று குறிக்கப் பெறும் இத்தலம், பல்லவர் காலத்தில், நந்திபுரம் என்று அழைக்கப் பட்டது. முற்காலச் சோழர் காலத்தில் பழையாறையாகிய நந்திபுரம் எனப்பட்டது. முதலாம் இராசேந்திர சோழன் இந்நகருக்குத் தன் காலத்தில் 'முடிகொண்ட சோழபுரம்' என்று பெயரிட்டான். 'ஆகவமல்லன் குலகாலபுரம்' என்று நடுக்காலச் சோழர்களால் அழைக்கப்பட்ட இவ்வூர், இரண்டாம் இராசராசன் காலத்தில் இராசராசபுரம் என்னும் பெயர் கொண்டது. வரலாற்றுப் பக்கங் களில் பல கால நிலைகளில் பல பெயர்களைப் பெற்றுத் திகழும் இப்பழையாறைத் திருநகர், இன்று, தன் பீடெல்லாம் குன்றி, பெருமைகள் மங்கி, ஒரு சிற்றூராகக் காணப்படுகின்றது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவராலும் போற்றப்படும் பழையாறைக் கோயில் இன்று அருள்மிகு சோமநாதர் திருக்கோயில் என்ற பெயருடன், இச்சிற்றூரின் ஒருபுறத்தில் சிதிலமான நிலையில் சீரழிந்து காணப்படுகிறது.

கிழக்குப்பார்த்த நிலையில் அமைந்திருக்கும் இக்கோயிலின் முதல்வாயில் கோபுரம் இடிந்து, அதன் அடித்தளமும் முதல் நிலையும் மட்டுமே எஞ்சியுள்ளன. மிகப் பரந்துபட்ட அடித்தளத்தின் கோட்டங்களில் சிங்கத்துடன் பொரிடும் வீரர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோட்டங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் கும்பப் பஞ்சரங்கள் அழகுற அமைந்துள்ளன. நெடிதான வாயிலின் மேல் கோபுரத்தின் முதல் நிலைசாலை, கர்ணகூடு போன்ற அமைப்பு களுடன் காணப்படுகிறது. இந்த அடித்தளத்தின் எடுப்பும், அமைப்பும் இது ஒரு காலத்தில் உயர்ந்தோங்கி விளங்கிய எழுநிலைக்கோபுரம் என்பதைக் கூறாமல் கூறிக்கொண்டிருக் கின்றன.

இக் கோயிலுக்கு அருகாமையில் கிட்டத்தட்ட இதே நிலையில் காணப்படும் தாராசுரத்தின் முதல்வாயில் கோபுரம் கூட இத்தனைப்

பெரிய அளவில் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒருகாலத்தில் நெடிதுயர்ந்த மதிற்சுவர்கள் இங்கு அமைந்திருத்தல் வேண்டும். இன்று அவற்றின் சுவடு கூட இங்குக் காணப்படவில்லை என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

இரண்டாவது கோபுரவாயிலுக்கு முன்னால் பலிபீடமும், நந்தியும் அமைந்துள்ளன. இப்பகுதியின் வடபுறத்தில் இறைவியின் கோயில், தெற்குப்பார்த்த நிலையில் அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் ஏற்பட்ட இணைப்பாகும். இறைவி கோயில் முக மண்டபத்தின் முகப்புச் சுவர்களில் அழகிய சிற்பங்கள் அணி செய்கின்றன. இவை திருமாலின் நரசிம்மத் தோற்றக் கதையை விளக்கும் சிற்பங்களாக அமைந்துள்ளன. பழுது பட்ட நிலையிலும் அழகோடு காணப்படும் உயிர்க்களை நிரம்பிய இச் சிற்பங்கள் பிற்காலச் சோழர் காலத்தவை யென்பது அவற்றின் வடிவமைப்பால் பெறப்படும் உண்மையாகும். சோமநாயகி என்னும் திருப் பெயருடன் இறைவி நாற்கர நாயகியாய்க் கருவறையில் காட்சி தருகிறார்.

இரண்டாவது கோபுரம் மூன்றுநிலைக் கோபுரமாய்ச் சிறிய அளவில் அமைந்துள்ளது. வெளித்திருச்சுற்றில் மதிலையொட்டி திருச்சுற்று மாளிகை அமைந்திருந்தமைக்குச் சான்றுகளாய்ச் சிதைந்து கட்டடக் கூறுகள் காணப்படுகின்றன.

கோயிலின் மகா மண்டபம், தாராசுரத்து ஐராவதேசுவரர் கோயில் போல, தென்புறத்தில் நாற்கர வடிவில் நீட்டப் பட்டுள்ளது. தேர் போல அமைக்கப்பட்டிருக்கும் இத் தென்புற நீட்டலின் அடிப் பகுதியில் சக்கரங்களும், இத் தேரை இழுப்பவை போல் யானை களும் குதிரைகளும் வடிவமைக்கப் பட்டுள்ளன இதன் தாங்குதள முகப்பில் யாளி வரிமானத்துக்கு மேல் ஆடல் தோற்றங்கள் அழகுச் சிற்பங்களாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. வரிமானத்திற்குக் கீழுள்ள பகுதி மண்மேட்டில் புதைந்துள்ளது. இம்மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள ஒரு தூண் மிக ஆழமாக வடிக்கப்பட்டுள்ளது. தூணின் முகப்பு முப்பிரிவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. மூன்று பிரிவுகளையும் அமர்ந்த நிலையில் உள்ள மூன்று சிங்கங்கள் தம் தலைகளால் தாங்குகின்றன. தூண் முடியும் இடத்திலும், பலகைக்கு மேல் மூன்று சிங்கங்கள் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டிருப்பது ஒரு புதுமையாகும்.

மகாமண்டபத்தை அடையத் தென்கிழக்கில் வாயிற்படிகள் அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் கிழக்குப் புறமும் தென்புறமும்

திறப்புடன் உள்ளது. கிழக்கு முகப்பில் திறப்பின் இருபுறமும் இரு கோட்டப் பஞ்சரங்கள் அழகுபட அமைக்கப்பட்டுள்ளன.

இம் மகாமண்டபத்தில், தென்புறம் மூன்று பிள்ளையார் வடிவங்களும், வடபுறம் முருகன், கைலாசநாதர் வடிவங்களும் கிழக்குப் பார்த்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கைலாசநாதர் சிற்பம் மிக அழகுடையது. இராவணன் கயிலையைப் பெயர்க்க முயற்சிப்பதும், இறைவி இறைவனை அச்ச உணர்வுடன் அணைத்துக் கொள்ளும் பாங்கும், இறைவனின் முகத்தில் பொலியும் அன்பும் பெருமிதமும் இச்சிற்பத்தின் சிறப்புக்குச் சான்றாகின்றன.

முன் மண்டபத்தில் கதிரவன், சந்திரன், பைரவர் முதலிய வடிவங்களுடன் ஒன்பான் கோள்களும், நால்வருடன் சேக்கிழார் திருவடிவமும் காணப்படுகின்றன. சேக்கிழார் திருவடிவம் காணப்படும் மிகச்சில கோயில்களுள் இதுவும் ஒன்று. இம் மண்டபத்தின் தென்புறத்தில் வெளிப்புறம் செல்ல வாயில் அமைந்துள்ளது. இது தற்போது அடைக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறத்தில், இவ் வாயிலையொட்டி அழகிய மண்டபமொன்று அமைந்திருந்தது போலும்.இப்போது அம்மண்டபத்தின் அடித்தளம் மட்டுமே காணப்படுகிறது. இதன் தாங்குதள முகப்பில் சிற்றுருவச் சிற்பங்களும், ஆடல் தோற்றங்களும் காணப்படுகின்றன.

இம்மண்டபத்தின் தெற்கு மூலையில், வடக்குப் பார்த்த நிலையில் காணப்படும் கொற்றவையின் சிற்பம் சிற்பக்கலையின் சிகரமாகும். எழிலே உருவாய் ஆறு திருக்கரங்களுடன் தோன்றும் இக்கொற்றவை வடிவத்தின் வலது முன்கரம் காப்பு முத்திரையில் அமைந்துள்ளது. வலது பின்கரம் சுசக்கரம் ஏந்தியுள்ளது. இடையிலுள்ள கரத்தில் வாள் உள்ளது. இடது முன்கரம் கடிய வலம்பித முத்திரையில் அமைந்துள்ளது. பின்கரம் சங்கு கொண்டுள்ளது. இடைக்கரத்தில் கேடயம் அமைந்துள்ளது. எருமையின் தலைமீது நின்ற நிலையில், முவ்வளைவுக் கோலத்தில், அருள் பொலியும் அழகு முகத்துடன் தோன்றும் கொற்றவையின் சிற்பம் சோழர்களின் கைவண்ணத்தில் எழுந்த இமயம்.

உள் மண்டபத்து வாயிலை வாயிற்காப்போர் காக்கின்றனர். கருவறையில் இறைவன் லிங்கவடிவில் அருள்மிகு சோமநாதராய் எழுந்தருளியுள்ளார். வெளித் திருச்சுற்றில் வடபுறத்தில் சண்டேசுவரரின் சிறிய உட்கோயில் அமைந்துள்ளது. இது அண்மைக் காலத்துத் திருப்பணியாகும்.

இக்கோயிலின் முன் மண்டபப் புறச்சுவர்களிலும், உள் மண்டபப் புறச்சுவர்களிலும் அழகிய கோட்டப்பஞ்சரங்கள் பலவாக அமைந்துள்ளன. இவற்றின் மேல் காணப்படும் மகர தோரணங்களும் அழகுபட வடிக்கப் பட்டுள்ளன. இந்தக் கோட்டங்களில் எல்லாம் தெய்வ வடிவங்கள் இருந்திருக்கலாம்.

கருவறையின் புறச்சுவர்களில் தேவகோட்டங்களின் இரு புறமும் இரண்டிரண்டு கும்பப் பஞ்சரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தென்புறக் கோட்டத்தில் தென் திசைக் கடவுளும், மேற்குப்புறக் கோட்டத்தில் அம்மையப்பரும், வடபுறக் கோட்டத்தில் நான்முகனும் காணப்படுகின்றனர். இம்மூன்று வடிவங்களுள் அம்மையப்பர் வடிவமும் நான்முகன் வடிவமும் அழகானவை. அம்மையப்பர் வடிவத்தின் பின் புறம் காளை அமைக்கப் பட்டுள்ளது. இறைவியின் புறத்தில் முன்னோக்கிச் சாய்ந்த தலையுடன் இக் காளை வடிவம் அமைந்துள்ளது. இறைவனின் கரங்களில் ஒன்று காப்பு முத்திரை காட்டுகிறது. இன்னொன்றில் கோடாரி உள்ளது. இறைவியின் கரங்களில் முன்கரம் வரத முத்திரையில் உள்ளது. பின்கரத்தில் சக்தி உள்ளது குடந்தை நாகேசுவரர் திருக்கோயிலில் காணப்படும் அம்மையப்பரைப்போல் இவ்வடிவமும் மிக அழகுபட அமைந்துள்ளது. பிற்காலச் சோழர்களின் கோயில்களில், மேற்குக் கோட்டத்தில் பொதுவாக லிங்கோத்பவர் தான் காணப்படும். இங்கு அவ்வழக்கத்துக்கு மாறாக அம்மையப்பர் அமைந்திருப்பது இக் கோயிலின் தொன்மையைக் காட்டுகிறது.

கருவறையின் மேலுள்ள விமானத்தின் இரண்டாம் தளம் மூன்று நிலைகளை உடையது. ஒவ்வொரு நிலையிலும் சாலை முதலிய விமான உறுப்புகள் பொருத்தமுற அமைந்துள்ளன. சிகரம் வட்டமானது. விமானத்தின் கூடுகளையும் சாலைகளையும் சுதை யுருவங்கள் அழகு செய்கின்றன. கொடுங்கை வரை கருங்கல்லாலும் அதற்கு மேல் செய்கல்லாலும் கட்டப்பட்ட விமானம் இது.

இக்கோயிலின் மகாமண்டபத்துத் தூண்களில் உள்ள கல்வெட்டுகள் இரண்டும் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் வெளியாகியுள்ள கல்வெட்டறிக்கையில். இவை பழையாறையில் அழிந்த நிலையில் உள்ள ஒரு சிவன் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டதாகக் கோயிலின் பெயர் கூடக் குறிப்பிடாத நிலையில் குறிக்கப்பட்டுள்ளது,[1] கல்வெட்டிலேயே கோயிலின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தும் கூட, அறிக்கையில் கோயில் பெயரை

1. ARE 1927, கல்வெட்டு எண்கள் 254, 255.

விடுத்திருப்பது வேதனையைத் தருகின்றது. இக்கல்வெட்டுகள் முழையூரில் உள்ள ஆறைவடதளிக் கோயிலில் இருப்பதாகத் திரு வே. மகாதேவனும்[2], திரு. வை. சுந்தரேச வாண்டையாரும்[3] குறித்திருப்பது முற்றிலும் பிழையானதாகும்.

இக்கல்வெட்டுகளுள் ஒன்று பழையாறை சோமனாதர் கோயிலில் உள்ள பெரிய மண்டபமும் சோபானமும் (படிகள்) பொருவனூரைச் சேர்ந்த வாணதராயன் நரசிங்கதேவன் என்பவனால் எடுப்பிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இன்னொரு கல்வெட்டு இங்குள்ள தூண் ஒன்றை நிறுவியவன் நரசிங்கதேவன் என்று கூறுகிறது.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் படையெடுப்பில் சோழப்பேரரசு சிதறிப்போனது வரலாறு கண்ட உண்மை. மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியில் நடந்த சோழப்பாண்டியப் போர்களில் முதலில் சோழர்களே வெற்றி கண்டனர். குலசேகர பாண்டியனைப் புறங்கண்டு 'திரிபுவன வீரதேவன்' என்ற பட்டப் பெயருடன் மூன்றாம் குலோத்துங்கன் வீரமுழுக்குச் செய்து கொண்டான். நசுக்கப்பட்ட பாண்டிய குலத்தில் எழுகதிரோனாய்த் தோன்றிய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அதற்குப் பழிதீர்த்துக் கொண்டான். எந்த மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய அரசை அழிக்கக் காரணமாய் இருந்தானோ அதே மூன்றாம் குலோத்துங்கனைப் போரில் வெற்றி கண்டு சோழப்பேரரசுக்கு ஒரு முடிவு கட்டினான் பாண்டிய வேந்தன். சோழர் நகரங்களை அழிப்பதிலும், குறிப்பாகப் பழையாறையைத் தூளாக்குவதிலும் பெருமகிழ் வெய்தினான் சுந்தர பாண்டியன். பாண்டியர்கள் காலத்தில் நிகழ்ந்த இந்த அழிவினின்றும் பழையாறை மீளவேயில்லை.

சமய குறவர்களால் பாடப்பெற்ற, வழிபடப் பெற்ற இத் திருத்தலம் சோழர்களால் கற்றளியாக்கப்பட்டது. எந்த மன்னன் காலத்தில் இது கற்றளியானது என்று குறிப்பாகச் சொல்ல முடியவில்லையாயினும், மேற்குப்புறக்கோட்டத்தில் காணப்படும் அம்மையப்பர் வடிவம் ஓரளவுக்குத் துணை செய்கிறது. முதலாம் ஆதித்தன் காலத்துக் கோயில்கள் பலவற்றில் மேற்குப்புறக் கோட்டத்தில் அம்மையப்பர் வடிவம் அமைந்துள்ளது. கோயிலடி

---

2. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர், திரு. வே. மகாதேவன், பக். 44

3. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, தலவிசேடக் குறிப்பு, வை. சுந்தரேச வாண்டையார், பக். 7

திவ்யஞானேசுவரர் கோயில், திருப்பராய்த்துறை தாருகவன னேசுவார் கோயில், உறையூர் தான் தோன்றீசுவரம், குடந்தை நாகேசுவரர் கோயில் போன்ற பல எடுத்துக்காட்டுகளைத் தரலாம். முதலாம் பராந்தகனுக்குப் பிறகு இக்கோட்டத்தில் திருமாலும், லிங்கோத்பவரும் இடம் பெறத் தொடங்கினர். சில விதிவிலக்குகள் இருக்கலாமென்றாலும், பொதுவான அமைப்பு முறை கொண்டு நோக்கும்போது இக்கோயிலை முதன்முதலில் கற்றளியாக்கியது. முதலாம் ஆதித்தனாக இருக்கலாம் என்று துணிவதில் தவறில்லை. இடைப்பட்டக்காலத்தில் இக்கோயில் மீண்டும் சிதைவுற்றுப் போயிருக்கலாம். இதைத் திருத்தியமைத்த திருப்பணியை இரண்டாம் இராசராசன் செய்ததாகக் கொள்ளலாம். இக்கோயிலின் அமைப்புமுறை ஒவ்வொரு அங்குலத்திலும் தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலையே நினைவூட்டும் வண்ணம் அமைந் துள்ளது. தேர் மண்டபம், கோயில் கட்டட அமைப்பு, கோட்டங் களின் எண்ணிக்கை, நான்முகன் அம்மையப்பர் சிற்பங்களின் அமைப்புமுறை இவையனைத்துமே இரண்டாம் இராசராசன் காலத்துக் கலைமுறையில் அமைந்துள்ளதை யாரே மறுக்க முடியும். இக்கோயிலை விக்கிரம சோழன் காலத்துக் கோயிலாகத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறித்திருப்பது பொருத்தமாக இல்லை.[4] துக்காச்சியிலுள்ள விக்கிரமசோழீச்சரம் என்ற கோயிலுக் கும் இதற்குமுள்ள ஒற்றுமையைவிட ஐராவதேசுவரர் கோயிலுக்கும் இதற்குமுள்ள அமைப்புமுறை ஒற்றுமைகள் அதிகம். இன்னும் சொல்லப்போனால் இது ஐராவதேசுவரர் கோயிலின் வரை படத்தைக் கொண்டே அமைக்கப்பட்டது என்று கூடக் கூறலாம். அக்கோயிலைப் போன்ற சிற்பச் செழிப்பு இல்லையென்ற ஒரே நிலை தவிர, மற்றபடி பார்த்தால் இதுவும் அதுவும் வடிவமைப்பில் ஒன்றாகவே தோன்றும்.

இங்குள்ள கல்வெட்டு குறிக்கும் நரசிங்கதேவன் போசள மன்னர்களின் படைத் தலைவனாகவோ அல்லது சிற்றரசனாகவோ இருக்கலாம். இவன் திருப்பணிக்குப் பிறகு, அண்மையில் ஒரு திருப்பணி நடந்ததாக இங்குள்ள செய்திக்குறிப்பு கூறுகிறது.

ஒரு காலத்தில் சீரும் சிறப்போடும் விளங்கிய, இக்கலையெழில் நிறைந்த கற்றளி, இன்று வருவோரும் காண்போரும் இன்றி வாடிய நிலையில், பாழடைந்து, சிதைந்து, சிதிலமாகியிருப்பது துன்பமானது. வெளித்திருச்சுற்று முட்புதர்களாலும், குப்பைகளாலும் சூழப்பட்டு நடக்க இயலாதபடி இருப்பது

4 Later Chola Temples, S R. Balasubramayam, P. 202.

கண்ணன் பாட்டு

கண்ணன் என் காதலன்

K. சோமசுந்தரம் B.A., B.L., தஞ்சை.

பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' தெய்வீகச் செறிவு கொண்டு செழுமை நலம் வாய்ந்த ஒரு சிறந்த இலக்கியக் கருவூலம். இஃது மக்கள் வாழ்க்கையினைச் செப்பம் செய்து ஆன்ம வளர்ச்சிக்குரிய பெய்ம் முறைகளை நெறிகோலிக் காட்டவல்லது. இஃது அன்றாட தினசரி வாழ்க்கைப் பேற்றுக்கு ஏற்றதாய கவிச்சுவையும், நகைச் சுவையும், அன்புச்சுவையோடு கூடிய காதல் உணர்ச்சிப் பெருக்கும் பொருந்தியதாயுள்ளது.உள்ளத்தில் தெளிவெய்தியுதிக்கும் உணர்ச்சி இசைமயமாய் வெளிப்படுங்காலை, இப்பாட்டு வளமான கற்பனை, எடுப்பான கருத்து, ஏற்றமாய வடிவம் ஆகிய முற்பண்புகளைக் கொண்டு திகழ்ந்து பொலிவுடன் கலையின்பத்தை விளங்க வைக்கும் பான்மையது. இப்பாட்டினிலே இயங்கும் சொற்கள் யாவும் உணர்ச்சித் துடிப்புடன் சந்த இன்பத்தோடு கூடி சீரியதும் விழுமியதும் பயந்து இலங்குவதால், இப்பாட்டு தன்னிகரில்லா எளிய இலக்கிய நயமும் தெளிவாய நடையும் கொண்டு மிளிர்வதா யுள்ளது. இஃது கற்பாரது உள்ளத்தில் சிந்தனையைத் தூண்டி வாழ்க்கைக்குரிய நம்பிக்கையை ஊட்டவல்ல அறம் முதலாய நான்கு உறுதிப் பொருள்களையும், உன்னி உணரத்தக்க முப் பொருள்களின் தன்மையினையும் பயக்கும் பாங்குடையது. இதன் கண், இயல் (சித்து) இசை (ஆனந்தம்) நாடகம் [சத்து] ஆகிய முத்தமிழ் ஞானச் செல்வமும், எண்வகைச் சுவைகளில் முதன்மை பெற்று விளங்கும், நகை, அவலம், பெருமிதம் என்ற முச்சுவைகளும் ஏற்றம் பெற்று விளங்கும் இயல்பும் இதன்பால் உள்ளன. மற்றும் இறைபால் சார்ந்து இரண்டறக் கலத்தல் இப்பாட்டிற்குரிய பக்தி

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொடுமையிலும் கொடுமை ! இக்கோயிலுக்குச் சென்றிருந்த போது, முன் மண்டபத்தைத் தாண்டிய என் மகனைப் படிக்கட்டில் இருந்த தேள் ஒன்று கொட்டிவிட்டது. நானும் மனைவியும் மருத்துவர் களாக இருந்தமையால் உடனே அவனைக் காப்பாற்ற முடிந்தது. தேளும், நச்சுப்பூச்சிகளும் உலவும் நிலையில், வழிபாட்டுக்குக் கூட வழியில்லாத வகையில் இத்திருத்தலங்கள் இருக்கும் நிலைக்கு மாற்றமே கிடையாதா ?

இலக்கியத்தின் கருப்பொருளாகுமென்பதை நுணித்தறிந்து மெய்ம்மை தேறுதல் வேண்டும், இறைபால் சார்தற்குப் பாரதியார், பகுத்தறிவின்பாற்பட்ட வழிமுறையாய ஞான ஒழுக்கத்தை மக்கள் பயின்றாழ்ந்து தெளிதற்கு, அவ்வொழுக்கத்தின் கருப்பொருளின் குறிக்கோளினை சமூக இயலின் கண்ணோட்டத்தில் ஏதும் பயனுமாய் இழையும் இனிமை தோன்ற, கண்ணனைக் காதலியாகவும், காதலனாகவும், காந்தனாகவும், தாயாகவும் தந்தையாகவும், சற்குருவாகவும், சீடனாகவும், அரசனாகவும், சேவகனாகவும் தோழனாகவும் குழந்தையாகவும், தீராத விளையாட்டுப் பிள்ளையாகவும், ஆண்டானாகவும், அடிமையாகவும் கற்பனை செய்து காண்கிறார். இவை கற்பார் உள்ளத்தில் கழிபெரும் மெய்யின்பம் நிலையப் பெறவே, அன்னார் தாமாகவே பாட்டின் அடிப்படையாய குறிக்கோளினை நன்குணர்வாரென்பது திண்ணம். இதனால் அன்னார், வாழ்வியல் முறையினை ஞான மெய்ந்நிலையில் நின்று தெரிந்தும், தெளிந்தும் அதனைக் கடைப்பிடிக்கும் மாண்பினையும் பெற்றாராவர். எனவே, கவிதைத்துறைக்கு முற்றிலும் பொருந்துமாறு, நாட்டு மக்களது பல்வேறு நிலைகளை இறை பக்திக்குரிய கண்ணோட்டத்தில் பிணைந்திருக்க வைத்து இயற்றப்பெறும் இக் கண்ணன் பாட்டு இயற்றமிழ் தெளிவினாலும்,இசையினிமையாலும், நாடகப் பண்பாலும், காலத்தை வெல்லும் புரட்சிகரமாய உயிர் கவிதை இலக்கியமென்க.

பொதுவாக, இறைவனைத் தலைவனாகவும் காதலனாகவும் குருவாகவும் கொண்டாடிப் பாடுவது மரபு. ஆனால் அருங்கவிஞர் பாரதியார், அம்மரபுபடி பாடி, பாடலிலே திருப்பம் தரும் முறையில் கண்ணனைச் சேவகனாகவும், காதலியாகவும் சீடனாகவும் பாடி, இறைவனன்றி எதுவுமில்லை என்ற மெய்க்கலை ஞானத்து உணர்வால் கண்ணனைக்காணும் பொதுநோக்குடன், எவ்வகையாலும் ஏத்துதல் ஏற்புடைத்தெனக் கருதுவது மிக்கதோர் வியப்புடைத்தாகும். கண்ணனைச் சரணாகதியடைவதே சாலச் சிறந்த முறையாகுமென காரண காரியங் கொண்டு,

தன் செயலெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின் செயல் செய்து நிறைவு பெறும் வணம்
நின்னைச் சரணடைந்தேன்'

என்பர். ஆதலால்

நல்லது தீயது அறியாத தனக்கு
நல்லது நாட்டுக,

என உள்ளத்தில் உறுதி பிறக்க, கண்ணனது சிறப்பியல்பினை, உணர்ச்சி மிகுமாறு இறைஞ்சும் கருத்தழகு நமது உள்ளத்தையும் மிகவும் கவர்ந்து நிற்பது தெற்றெனத் தெளிப்படும். பாரதியார். திருவருளையும் மெய்யருளையும் வாழ்வின் பயனாகக் காட்டிமெய்ந் நெறி ஞானத்தில் தெய்வீகக் கருத்தறிந்தொழுகும் நல்லறத்தை த்தான் தன்னனுபவத்தில் கண்டறிந்த உண்மையொடு விளக்கி யுள்ளார்

தன் வாழ்வின் நிகழ்விலும், ஆங்கு தங்கு மோர் இயற்கைத் தனி அனுபவத்திலும் கண்ணனையே காணும் பாரதியார், இயற் கையின் எழில் நிலவும் பொருள்களிலும், உயிர்களிலும் கண்ணனது இறைமை மணம், வெவ்வேறாக பல்வகையில் இணைந்து தெய் வீகச் சுவையாகக் கமழுவதை நினைவு படுத்தி, தன் இதயம் நெகிழ உருகி,

கண்ணபெருமானே!
நீ, காயிலே புளிப்பதென்னே ?
நீ, கனியிலே இனிப்பதென்னே ?
நீ, நோயிலே படுப்பதென்னே ?
நீ, நோன்பிலே உயிர்ப்பதென்னே ?
நீ, காற்றிலே குளிர்ந்ததென்னே ?
நீ, கனலிலே சுடுவதென்னே ?
நீ, சேற்றிலே குழம்பலென்னே ?
நீ, திக்கிலே தெளிந்ததென்னே ?

எனத்துதி முறையில், கண்ணனது இயக்கமும் இறைமையுணர்வும் எழும் இயல்பினையும் தெளிவித்தருளியது. ஈண்டு கருத்திற் பதிசுகற்பாலது. மற்றும் அவர், முக்திக்கு வித்தாகும் பக்தி நெறியினைக் கடைபிடிந்தொழுகி, கண்ணனது திருவருளில் திளைத்திருக்கும் மாண்பினை எடுத்துக்காட்டி இன்புறும் வகை யினை இயம்பியுள்ளார். அருள்செறிந்த சாத்திரமும் தோத்திரமும் கலந்து நிற்குமாறு, சந்த மணங்கமழும் உரை சிறந்த கண்ணனது செந்தமிழ்ப் பாக்களைப் பாரதியார், நெஞ்சம் நெக்குருகுமாறு யாத்துள்ள அருமையும் பெருமையும் கூறுந்தரமன்று

கண்ணனது குழலோசையினைக் கேட்ட ஞான்று, பாரதியாருக்கு தெய்வக் கவிதையுணர்வு தன்னுடலகத்தே இழை யோடிச் செல்வதாக ஏற்பட்டுவிடுகிறது. அதுபோது தான், சுற்றுப் புறத்தே எஞ்ஞான்றும் காணும் நண்பன், குழந்தை, தந்தை, தாய் தலைவன் சேவகன் ஆசிரியன், சீடன், கணவன், மனைவி எனும் தோற்றங்களிலே யாவுமாய் நிற்கும் கண்ணனை தெய்வீகச் சுவை

யாக அனுபவித்துத் திகழும் அழகுக் கடவுளாகவும், ஆனந்த உருவமாகவும், காதலின்பமாகவும், இறையுணர்வின் இன்ப எழுச்சி யாகவும்,ஞான விளக்கமாகவும்,பாரதியார் கண்டு மன மலர்ச்சியால் மகிழ்ச்சியுறுகிறார். இம் மகிழ்ச்சியால், கண்ணனது இத்தகைய பெருமையினை, இறையுணர்வு தழைக்குமாறு, பாஞ்சாலிசபதத்தில் தேன் ததும்பி ஊறும் வாசகத்தால் சீரும் சிறப்புடையதாக, பாரதியார் திகழ வைத்து விடுவதையும் சற்றே காண்க

கண்ணனைக் காதலனாகவும், காதலியாகவும், தந்தையாகவும், தாயாகவும், குருவாகவும் மாணவராகவும், மற்றும் சமூக பல்வேறு நிலைகளின் உறவு முறையின் வாயிலாக அன்பு செய்யுங் காலை, துவிதபாவனை ஒருமுனைப்பட்டு நிற்க, 'நான்-நீ' எனும் பாவனையில், 'நான்' என்பது மறைய, அன்பு செய்யப்படுவரது நினைவே, தன் மனத்தில் நிலைத்து குடி கொள்ளும் இயல்பை, பாரதியார், குறிப்பாக நம்மவர்க்கு தெளிவுபடுத்தி விடுகிறார். மற்றும் அவர், நான்—நீ என்ற இரண்டும் அன்பினால் இரண்டறக் கலந்து ஒன்றுபடுங் காலையிலும், துவித பாவனை எவ்வாறு மாறி, அத்துவித நிலையினை மாறுபாடின்றி எய்துகின்றதென்பதையும் சுட்டிக்காட்டி விடுகிறார். இதன்வழி, கண்ணனோடு இரண்டறக் கலக்கும் உறவினை, பாரதியார் அறிவுறுத்தி, வாழ்வின் கலைப் பூரணத்து அனுபவமே கண்ணன் என்பதை நினைவு கூறச் செய்து, தம்மை மறந்து, அதன் மகிழ்தற்குரிய அருமைப் பாட்டினை கண்ணன் பாட்டில் விரித்து விளக்குவாராயினார். கண்ணனது அருட்டிரு விளையாடலுக்கு இடமாகும் உலகம்,உண்மையென்பதை யும், 'ஒன்றே மக்கட்குலம், ஒன்றே பரம்பொருள்' என்பதையும் அடிப்படையாகக் கொண்டு, மனித தனி வாழ்வினையும் சமூக வாழ்வினையும் இயன்றவரை, கண்ணன் சார்பாக, காதலழகு மயமாகவும், இன்பத் தொண்டு மயமாகவும், அறநெறியில் உயிர்ப்புடன் அமையச் செய்தலே உய்யும் வழி யென்பது பாரதியாரின் செவியறிவுறூஉ. இவ்வாறு இறைவனையும் பல பாவனைகளின் வழி, அன்பு, பக்தி ஆகிய நெறிகளில் அந்த கரண சுத்தியடைய, பாரதியார்,கண்ணன் கருவியாகப் படிந்து நின்று இசையமுதமாகிய பாக்களைப் பாடு வதைச் சிந்திக்கின், அவரது வாழ்க்கையே ஓர் அமர உயிரோவிய மாகத் தோன்றித் திகழ்வதாகிற தென்பது உணரப்படும்.

கண்ணன் கருவியாக விளங்கும் பாரதியாரது கண்ணன் பாட்டு இதயங்கொண்டு உணர்தற்குரியது,

பேணி வையமெல்லாம் — நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணுமைந்தரெல்லாங் கண்ணன்
பொறிகளா வரன்றோ?

என்பது பாரதியாரின் நெஞ்சில் பொங்கும் அறம் செறியும் எழுச்சி, இவ்வெழுச்சி வழி பாரதியார் பாடும் கண்ணன் பாக்கள், அவரது சிந்தை உரத்தால், ஆத்மாவை தூய்மை செய்யும் சிறப்பினை வாய்ந்துள்ளன. அவை, இறையறிவின் ஒளி வீசி, யாவரது உள்ளத்தையும் அள்ளும் திறத்தன. அரிய தெய்வீகப் பொருள்களையும் எளிய முறையில் எழில்வளம் கொழிக்கத் தெளியக் கூறும் பான்மையன. இதனால் சிந்தனைச் சிற்பியாகிய பாரதியாரை, அவரது கண்ணன் பாட்டு மூவாத்மா சிற்பியராக மேம்படுத்தி, நம்மவரையும் தெய்வீக அருள் நெறியின் ஆன்மீக ஒழுக்கங்களில் ஈடுபடுத்தி, கண்ணனது அற்புத அருளில் திளைக்குமாறு செய்துவிடுகின்றது. பாரதியார் தன் கண்ணன் பாட்டில், இறையின்பப் பொருளை விழுமியதாக பல் மெய்பாட்டுச் சுவைகளைப் பெய்து மெய்மை படக்காட்டி, தன் கற்பனைத் திறனால் நம்மையும் மறக்கச் செய்து, எங்கேயோ, நம்மை அழைத்துச் சென்று, ஆங்கே, தமது கவிதைத் தரும் பொருளின் மணத்தை நுகருமாறு தூண்டி விடுகிறார். பின்னர் நமது உள்ளத்தை புனிதமாக்கி உருக்கி குளிர்வித்து, இறையின்பப் பொருளில் அழுந்தும்படி மகிழவைத்து, அப்பொருளாகவே, நம்மையும் மாறி விடும்படிச் செய்துவிடுகிறார். ஆகவே, கண்ணன் பாட்டு, உணர்வு ஊக்கத்தை நல்கும் அகப்பொருட் சுவையோடு, மறுமைப்பேறு எய்தும் நெறியையும் விளக்கும் இன்பவூறலாய்ப் பொலிந்து திகழ்வதாயுள்ளது. எனவே, கண்ணன்பாட்டு பாரதியாரின் மெய்யுணர்வில் விளைந்த உயிர் இலக்கியம் : வேத சார ஞானத்து உபநிஷதம்,

பாரதியார், அபரபக்தியின் மூலம் கண்ணனுடன் காதலுறவு பூண்டு, இயற்கை இறை இன்பத்தில் மனமுருகி, யோகக்கனலால் அதனை காதலன்பு மிளிரும் கவிதையின்பமாக உருவாக்கி, தனது வாழ்வில் நிகழும் அனுபவங்களில், கண்ணனைக் கண்ணாரக் கண்டு, அற்புத மதுர பாவனை ரசங்களோடு கூடிய காதலன்பு நெறிபடரும் இன்பக் கவிதையமுத மலர்களை, அக்கண்ணனுக்கே அணிவித்து உருகுவாராயினார். பண்டைநாட் புலவர்களது பண்பினைக் கொண்டு கவினுறும் பாரதியாரின் காதல் கவிதைகள் அன்புறவு எனும் தத்துவத்தை விளக்கி வாழ்வினை வளமாக்கும் நிறைவினைச் செய்யும் மாண்புடையன. இசையமைப்புடைய 'கண்ணன் — என் காதலன்', 'கண்ணம்மா — என்

காதலி' என்ற கவிதைகள் பண்ணமைதியின் அழகினைக் கொண்டு, தாளத்தோடு பொருந்துமாறு, பாடுவதற்கு ஏற்றவை, 'கண்ணன் பாட்டு' காட்டும் காதலன்பு நெறியும் இன்பநெறியும், மக்களை அத்தகைய நெறிகளில் இயங்க வைக்கும் வெற்றி வாய்ந்ததாக விளங்குகிறது. மற்றும் இஃது உலகு ஒரு குலமாகத் துணை செய்யும் பெற்றிமையினை வாய்ந்த புதுமைப் பொதுமையினை யுடையது. அற்புதமாய் கற்பனை செறிந்த காதற் கவிதைகளில், இயற்கைக் காதல் எவ்விதம் படைக்கப்பட்டுள்ள தென்றும், அது மனதை தூயதாக்கி, இருதயத்தை விரிவுபடுத்தி, பகுத்தறியும் பாங்குடையதென்றும், தெய்வபக்தி நிலையினை அடைதற்கேற்ற ஏறுதற் கருவி யென்பதையும், பாரதியார் விளக்கியுள்ளார்.

பாரதியார், பட்டப்பகலில், பாவலர்க்குத் தோன்றுவதாகிய ஒப்பற்ற நெட்டைக் கனவுகளில் ஓயாது சஞ்சரித்துக்கொண்டே இயற்கையின் எல்லையற்ற அழகின்பத்தில் கண்ணம்மாளுடன் திருக்காதலுறவு பூண்டு கலந்து,

'சுட்டும் விழிச்சுடர்தான் — கண்ணம்மா !
சூரிய சந்திரரோ ?
வட்டக் கரியவிழி — கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ ?
பட்டுக் கருநீலப் — புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் — தெரியும்
நக்ஷத்திரங்களடி !
சோலை மலரொளியோ — உனது
சுந்தரப் புன்னகை தான் ?
நீலக் கடலலையோ — உனது
நெஞ்சிலலைகளடி !
கோலக் குயிலோசை — உனது
குரலினிமையடி !
வாலைக் குமரியடி — கண்ணம்மா !
மருவக் காதல் கொண்டேன்.

என எஞ்ஞான்றும் இன்பக் காதலில் ஆழ்ந்திருப்பார். பாரதியார், கவிவிண்ணிற்களிதூங்கி இன்பக் காதலன்பு நினைவிலே, தான், விண்ணவனாகி விட்டதை எக்களிப்பால்,

எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே — இங்கோர்
விண்ணவனாகப் புரியுமே'.

எனக் குறித்திருப்பது அறியப்படும்.

அன்பெனும் தன்மையிலே பிறந்து நிறையன்பு அருளினை அளிக்கும் பான்மையது காதலாதல் பற்றி, பாரதியார்,

'கண்ணம்மா! நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்'

என்பர், பின்னர் கண்ணம்மாவின் ஞான வொளி வீசும் உருவக் கவர்ச்சியில் மருவும் அழகினை வியந்து புகழ்ந்து

'நீலக் கடலினிலே — நின்றன்
நீண்ட குழல தோன்றுதடி !
கோல மதியினிலே — நின்றன்
குளிர்ந்த முகம் காணுதடி !
ஞால வெளியினிலே — நின்
ஞான ஒளி வீசுதடி !
கால நடையினிலே — நின்
காதல் விளங்குதடி !

என உலக வளர்ச்சிக்கு, ஆக்கம் தேட ஊக்கமுடன் துணைபோகும் பெண்மை, உள்ளங்கை நெல்லிக்கனியெனெப் பிறங்குவதை பாரதியார் கவிதை அழகுடன் இனிதே புலனாக வைத்தார். மற்றும் உயிர்ப்பாய் ஒளிரும் கண்ணம்மாவின் அமுதூற்றினையொத்த இதழ்களையும், நிலவூறித்ததும்பும் விழிகளையும், பொன்னொத்த திருமேனியையும் கண்டு பாராட்டி விம்மிதமுற்றார்.

'நீயென தின்னுயிர் கண்ணம்மா—எந்த
நேரமுநின்றனைப் போற்றுவேன்—துயர்
போயின போயின துன்பங்கள்—நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே—என்றன்
வாயினிலே அமுதூறுதே—கண்ணம்
மாவென்ற பேர்சொலும் போழ்திலே—உயிர்த்
தீயினிலே வளர்சோதியே—என்றன்
சிந்தனையே என்றன் சித்தமே !

இங்ஙனம், உள்ளத்தை உயர்த்தும் ஆற்றலுடைய காதலை உணர்ந்த பாரதியார், 'காதல் செய்வீர் ! உலகத்திரே !' எனப்பாடியுள்ளது கருதற்பாலது. அவர் இன்பத்தில் எல்லாம், காதலின்பம் பெரியதென்றும், அது விண்ணகப்பொருளென்றும், அதனை ஒரு நிலையாய சேர்க்கையோக உணர்ச்சியாக எண்ணவேண்டுமென்றும் கூறுவர், காதலைப்பற்றிய கருத்தினைக்கையாள்வதும், எழுதுவதும், கூரிய கத்தி முனையில் நடப்பதுபோன்று நடத்தல் வேண்டு

மாதலால், அதற்குப் போதிய போக சிந்தனையும், உரிய யோகப் பயிற்சியும், உயரிய பொறுப்புணர்வும்வேண்டப்படும். இப்பண்புகள் யாவையும் வாய்ந்துள்ள பாரதியார், காதல்வரம்பையும், பாவலர் என்ற பாங்கில் கற்பனைச்செறிவால், மீறி காதலன்பின் நீர்மையினை அழகுறச் சுட்டிக்காட்டியுள்ளார். மற்றும் பாரதியார் காதலினால் மானுடர்க்கு யோகக்கல்வியறிவு உண்டாகுமென்றும், அக்கல்வியாலே அண்ணாரது கவலை தீர கவிதை பிறக்கு மென்றும், இசை, சிற்பம் முதலாய கலைகளும் பெருகிவளரு மென்றும், இஞ்ஞாலத்துத் தலைமையின்பமென்பது அஃதேயென மிக்க பொருண்மை தோன்ற இறையுணர்வினை ஊட்டி அதன் அழகினைக்காட்டும் தம் காதல்பாக்களில், நுட்பமதிட் பஞ்செறிய, விளக்கியுள்ளார். இவ்வாறு, 'கண்ணன் காதல்பாக்களில்' விளங்க வைத்தும், பாரதியார், பண்பட்ட வாழ்வை அமைக்க வழிகூட்டும் பான்மையிலே, அப்பாக்களால், நாட்டிற்கும் பெருமை தரும் முறை யில் நாட்டின் பெருமை மக்கட்சமுதாயத்தைப் பொருத்தது என மிக நளினமாகவும், காதல், அன்பு ஆகியவைகளை சுத்த சுதந்திர சுவையோடு அறிவுறுத்துவாராயினார்.

'கண்ணன்— என்காதலன்' எனும்கவிதைப்பாடல்கள்'கண்ணன் பாட்டின்' இதயமாக விளங்கும் பெற்றிமையினையுடையன' கண் ணனைக் காதலனாகவும் கண்டு, பாரதியார், தம்மைக்காதலியாக உருவகித்துப்பாடும் பாடல்கள், காமமிக்க சுழிபடர் கிளவித்துறை யின் பாற்படும். கண்ணனைக்காண, தனிமைகொண்ட காதலி, கூண்டுக்கிளியினைப்போல் மிக நொந்து தவித்தாள், தனது தோழி யினிடம் தனது நெஞ்சம், தூண்டிற்புழுவினைப்போன்று துடித் ததைத் தெரிவித்து, தனது மனம், வேண்டும் பொருள்கள் பால் வெறுப்புற்றதும், உள்ளத்திலே நல்லதொரு சுகமும் அமைதியும் கிடைக்காததால், ஊணும் உறக்கமும் இன்றி நொந்து தளர்ந்ததே என்ன நெட்டுயிசர்ப்போடு கூறினாள்.

'பாலும் கசந்ததடி—சகியே
படுக்கை நொந்ததடீ,
கோலக்கிளிமொழியும்—செவியில்
குத்தலெடுத்ததடீ.
நாலுவைத்தியரும் இனிமேல்
நம்புதற்கில்லையென்றார்;
பாலத்து சோசியனும்—கிரகம்
படுத்துமென்று விட்டான்.
கனவு கண்டதிலே—ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்,

இனம் விளங்கவில்லை, —எவனோ
என்னகந் தொட்டுவிட்டான்.
வினவக் கண்விழித்தேன்—சகியே
மேனி மறைந்து விட்டான்;
மனதில் மட்டிலுமே—புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி.

எண்ணும் பொழுதிலெல்லாம் —அவன் கை
இட்டவிடத்தினிலே
தண்ணென்றிருந்ததடீ—புதிதோர்
சாந்தி பிறந்ததடீ:
எண்ணியெண்ணிப் பார்த்தேன்— அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்;
கண்ணன் திருவுருவம்— அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடீ

கண்விழிக்க, மனதில் மட்டிலும் புதியதோர் மகிழ்ச்சி கொள்ள, கண்ணன் திருவுருவம் முன்னின்று பின்னர் மறைந்து விட்டது.

ஓர் நாள் நள்ளிரவில், தோழிப்பெண்களுடன் காதலி நெடுநேரம் பேச்சும், ஆட்டமும் பாட்டமும் அதிகரிக்க, அவளது அன்னை அதட்ட, தோழிப்பெண்கள், தம் தம் இல்லம் ஏகிடவே, காதலி தனியிருந்து 'கண்ணனைக் காணாது எனது கண்கள் உறங்கவில்லை பிரியமிக்க கண்ணன், வீதி முனையிலே வேலிப்புறத்தில் என்னைக் காணக் காத்திருப்பான். கண்ணனை இப்போதே கட்டித் தழுவி அணைப்பேன்' என கண்ணனைத் தேட முற்பட்டாள்.

'திக்குத் தெரியாத காட்டில் கண்ணா! உனைத்தேடித்தேடி இளைத்தேன். மரங்கள் மலைகள். விலங்குகள், பாம்புகள், முட்கள், மண்டித்துயர் கொடுக்கும் புதர்கள் அடர்ந்த இக்காட்டில் எங்கும் தேடினேன். என்கைகால் சோர, துயில் படரலானேன். அவ்வேளையில், 'சோர்ந்து படுத்திருக்கலாமோ? என ஒரு வேடன்

'பெண்ணே, உனதழகைக் கண்டு—மனம்
பித்தங்கொள்ளு' தென்று நகைத்தான்— அடி
கண்ணே, எனதிருகண மணியே—உனைக்
கட்டித் தழுவ மனங்கொண்டேன்,

... ... *'நல்ல*
துண்டக்கறி சமைத்துத் தின்போம் - சுவை
தேர்ந்தே கனிகள் கொண்டு தருவேன்—நல்ல
தேங்கள்ளுண்டினிது களிப்போம்'

என, கண்ணனைத் தேடும் காதலி

'அண்ணா, உனதடியில் வீழ்வேன் — எனை
அஞ்சக் கொடுமை சொல்லவேண்டா — பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணை — உன்றன்
கண்ணாற் பார்த்திடவுந்தகுமோ ?'

எனக் கூற, வேலினைக் கொண்ட வேடன்

'ஏடி, சாத்திரங்கள் வேண்டேன் — நின
தின்பம் வேண்டுமடி, கனியே ! நின்றன்
மோடி கிருக்குதடி தலையை, — நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப்போல'

எனப் புகன்றான்.

இந்த உரையைக் கேட்ட பின்னர், கண்ணனின் காதலி மயங்கி வீழ்ந்தாள். சற்றைப் பொழுதில் மயக்கம் தீர விழிக்க, அங்கே வேடனைக் காணாது, தன் அபயக்குரலினைக் கேட்டு வந்த மணிவண்ணனைக் கண்டாள். அவனது கருணையை எண்ணி வியந்து, 'என்னை வாழ்விக்க வந்த அருள்வாழி ! எனத் தலைவி மகிழ்ந்தாள். ஈண்டு பாரதியார் கண்ணனின் அருட் கருணையின் பெருக்கின் திறத்தை எழிலுற எளிய முறையில் எடுத்தோதி விளக்கி யது, பலமுறை சிந்தித்து கருத்தில் பதிக்கற்பாலது.

இனி, காதலி, பாங்கியைத் தூது விட்டதைக் காண்குவம், 'தோழி ! கண்ணனது மனநிலையை அறிந்து கண்டு நீ வர வேண்டும். என்மேல் பிழை யாதுளது ? சொன்ன மொழி தவறினார். மையல் கொடுத்து விட்டு தலை மறைந்து நிற்பவர்க்கு மானமு முண்டோ ? பொய்யை உருவாகக் கொண்ட அவருக்கு எங்கும் தோழமை யில்லை போலும் என்னிடம் தன்னந்தனியே ஓர் நாள் ஆற்றங்கரையில், பேசியதெல்லாம் பிரபஞ்சம் முழுதும் முரசு சாற்றுவேன் எனக் கூறி வரச்சொல். இடப் பெண்களுடன் மயக்கம் செய்யும் சூழ்ச்சித் திறமை, வீர மறப் பெண்களிடம் வேண்டிய தில்லை. அச் சூழ்ச்சி யாவும் வீழ்ச்சியுறும் எனச் சொல்லிவிடு. ஆனால்,

'பெண்ணென்று பூமிதனிற் பிறந்துவிட்டால்—மிகப்
பீழையிருக்குதடி தங்கமே தங்கம் ;
பண்ணென்று வேய்ங்குழலில் ஊதி வந்திட்டான்
— அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே.

நேரமுழுதிலு மப்பாவித் தன்மையே — உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம் :
தீர ஒரு சொல்லின்று கேட்டு வந்திட்டால் — பின்பு
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்.'

பிறிதோரிடத்தில், பாரதியார், 'தெய்வம் உண்டு ஆம் எனல் கேளீரோ' எனச் சுட்டுவது ஈண்டு நினையத்தக்கது.

ஆசை முகமறந்து போச்சே ! இதனை யாரிடம் சொல்வேன். தோழி ! கண்ணில் வரும் கண்ணன் அழகும், மலர்ச்சிரிப்பும் முழுவதும் காணமுடியவில்லை.

'ஓய்வு மொழிதலுமில்லாமல் — அவன்
உறவை நினைத்திருக்கு முள்ளம்'

எப்போதும் என்வாயுரைப்பது அந்த மாயன் புகழினையே !'

'தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வையம் முழுதுமில்லை தோழி

என் கண்ணன் முகமறந்தால், கண்களிருந்தும் பயனில்லை காண் !

என் காந்தன் கண்ணன் இனிய கனிகள் தருவான்: பனிசெய் சந்தனமும் பல்வகை அத்தர்களும் கொணர்வான்: வண்ணச் சவ்வாது பொட்டிடுவான் மணங் கூடும் கூந்தல் தைலங்கள் தந்திடுவான் : விழிக்கு மை கொண்டு வருவான்: தண்டைப் பதங் களுக்குச் செம்பஞ்சு சாய மேற்றஊட்டுவான் : மார்பெழுத குங்குமக் குழம்பும் கொணர்வான்: கண்ணன் பேசருந் தெய்வமல்லவா ! தெய்வமல்லவா ! அவன் முகத்தைப் பார்த்திருந்தாலே போதும். மங்களமு ம'கும்.' இவ்வாறு பாரதியார் காட்டும் வாழ்வியலின் தனி உண்மை நிலைகளை அவரது கருத்தூர்தியால் ஓரோ வழி காண வொல்லுமாதலின், அதனை மயக்கமி›ா காதலறிவும் மாசிலா காதல் நெஞ்சும் கொண்டு காதலன் பின் உள்ள அறநிலை யினை உணர அவாவுதல் வேண்டும்.

பாரதியார், 'கண்ணன் - என் காதலன் என்ற பகுப்பில், கண்ணனை அன்புடன் காதலித்த கண்ணம்மாள் சிறுபொழுதும் தன்னோடு உடனுறையாமல் பிரியின், காலம் மாறினாலும் கண்ணன் பால் கொண்ட காதலன்பு மாறாது, கண்ணன் தம்மைச்

தமிழகத்தின் இழிநிலை

கி. ஆ. பெ. விஸ்வநாதம்,

1. தேசியமொழி 14 என ஒப்புக்கொண்டு இந்தி மொழிக்கு மட்டும் கோடிக்கணக்கான ரூபாயை மத்திய அரசு செலவு செய்கிறது.

2. தேசியமொழி 14ல் சேராத 6 ஆயிரம் பேர் மட்டும் தாய் மொழி என ஏற்றுள்ள சமஸ்கிருத மொழியை வளர்க்க பல்கலைக் கழகங்களை அமைத்துப் பலகோடி செலவு செய்யப்படுகிறது. 6 கோடி மக்களின் தாய் மொழியாகிய தமிழ் மொழியை வளர்க்க லட்ச கணக்கில் மட்டும் செலவு செய்து வருகிறது.

3. ''எக்காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்த மாட்டோம் இது உறுதி'' எனக் கூறிக்கொண்டே சுங்க இலாகா, இரயில்வே. அஞ்சல் நிலையம் வருமானவரி அலுவலகங் கள் ஆகியவற்றில் இந்தியைப் புகுத்திக்கொண்டும் இந்தி படித்தவர் களுக்குதான் உத்தியோக உயர்வு என்று திட்டமிடபட்டு இந்தி புகுத்த பட்டு வருகிறது.

4. வானொலியிலும்-தொலைக் காட்சியிலும் வேண்டுமென்றே தமிழ் அழிக்கப்பட்டு வருகிறது. ''சேர்ந்து பாடுவோம்'' என்ற தலைப்பை வானொலி நிலையத்தில் புதிதாகப் புகுத்தி இந்தி பாடல்

(முன் பக்கத் தொடர்ச்சி)

சாருவான் என்ற செம்மையுள்ளத்தினை நிலையினையுடையாளாக இருப்பாள் என்பதைச் சிறப்புரிமையாக, பாரதியார் நுவலும் இயல்பு எளிதில் உணர்ந்து கொள்ளப்படும். மற்றும், கண்ணனைக் காதலித்த கண்ணம்மாள், தனியாய் இருக்குங் காலையிலும், கண்ணனது காதற் சிறப்பினை ஒன்றையே மனமாரக் காதலிக்கும் மனநிலையைப் பெற்றிருக்கும் பாங்கினை பாரதியார், பழந் தமிழ் காதல் சிறப்பொடு விதந்தோதுதல் பெரிதும் நினைவு கூர்தற் பாலது. கண்ணம்மாள், கண்ணனைத் தக்க அளவோடும் மிக்க வளனோடும், தூய்மைப் படர காதலிப்பதெல்லாம், காதலன்பு ஒன்றனையே கையாண்டு இறைநலமும் பத்துவித அனுபவமும் பெறுதற்குரியதற்கே யென்பதும் அறிதற்பாலது. எனவே, பக்திப் பண்புகளோடு காதலன்பு பற்றிய நுண்ணிய கருத்துக்கள் எனைத் தென்பது, ஏற்றமும் எளிமையின் எழிலும் பெற்றுத் திகழும் பாரதி யாரின் காதல் கவிதைகளின் வழி, நன்கு விளங்குதல் சிந்திக்கற் பாற்று.

களையே ஒலிபரப்பித் தமிழ் மக்களின் காதுகளில் இந்தியைப் புகுத்திக்கொண்டே வருகிறது.

5. இந்தியன் பாங்கி போன்ற தமிழ்நாட்டு பாங்கிகளில் கூட தமிழ் மக்கள் பணம் கட்டுகிற தாள்களில் கட்டாயமாக இந்தி புகுத்தப்பட்டு தமிழ் அழிக்கப்பட்டு விட்டது

6. சமஸ்கிருத மொழியில் மொழிபெயர்க்கப்பெற்ற ஆயுர்வேத மருத்துவ கல்லூரிகள் இந்தியாவில் 98 நடந்தும் தமிழ் மருத்துவ மாகிய சித்த மருத்துவ கல்லூரி ஒன்றே ஒன்று அதுவும் தமிழ கத்தில் மட்டும் நடைபெற்று வருகிறது.

7. வட நாட்டு கலைகளை வளர்த்துக்கொண்டும் வடநாட்டு கலைஞர்களை பாராட்டிக்கொண்டும் அவர்களுக்கு பரிசளித்தும் தமிழ் நாட்டின் கலைகளையும், தமிழ் கலைஞர்களையும், இழிவு படுத்தி வருகிறது.

8. வெள்ள நிவாரணத்திற்கும் நெல் விலைக்கும், ஏன் சாப்பாட்டு அரிசிக்கும் கூட வடக்கே போய் அவர்களின் வாயிலில் கையேந்தி நிற்கவேண்டி இருக்கிறது.

9. சிறிய ஆலைகளை கூட தொடங்க அவர்களிடம் போய் அனுமதி கேட்டு நடத்த வேண்டிய இழிநிலையில் தமிழ்நாடு இருந்து கொண்டு இருக்கிறது.

10. கடற்கரைகளையே பார்க்காத மத்தியபிரதேசம் உத்திர பிரதேச மக்களுக்கு உலகம் முழுவதும் சரக்குகளை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் உரிமங்கள்பல வழங்கப்பெற்று ஏறத்தாழ 600 மைல் கடற்கரைகளை உடைய தென்னகத்திற்கு 100க்கு ஒன்றிரண்டு வீதம் கூட ஏற்றுமதி இறக்குமதி உரிமம் வழங்கப்படவில்லை.

11. வறுமைக் கோட்டிற்கும் கீழ் 100க்கு 62 வீதம் வாழ்கின்ற மக்களை தமிழ் நாட்டில் மட்டுமே காணமுடிகிறது. வடநாட்டாரின் சராசரி வருமானம் 1185 ரூபாயாகவும் தமிழ் நாட்டு மக்களின் சராசரி வருமானம் ரூ 34 ஆகவும் இருந்து வருகிறது.

12. படித்த பட்டதாரி இளைஞர்களின் வேலை இல்லாத் திண் டாட்டம் தமிழ் நாட்டில் மட்டுமே அதிகமாக வளர்ந்து கொண்டே வருகிறது.

13. தமிழகத்தின் பழந்தமிழ் மக்கள் ஏறத்தாழ1கோடி பேர்கள் சேரியிலும் சேற்றிலும் பன்றிகளோடு பன்றிகளாய் வருந்தி வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர்

14. கோவில் கட்டியவன் கோவிலுக்குள் போக முடியாத நிலையும், குளம்வெட்டியவன் அதில் தண்ணீர்குடிக்காத நிலையும் இன்னும் இருந்துகொண்டே இருக்கிறது.

15. பம்பாயிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டு இருந்த ஜனதா ரெயில் வண்டியை கன்னட நாட்டுக்கு திருப்பிவிட பட்டு, தமிழ் நாட்டிலும் பம்பாய் நகரிலும் வாழ்கின்ற தமிழ்மக்கள் அனைவரையும் துன்புறுத்திக்கொண்டே இருக்கிறது.

16. மானத்தை இழந்தும், பொருளை இழந்தும், உயிரை இழந்தும், 30 மைல் தூரத்தில் துடித்துக்கொண்டு இருக்கிற ஈழ மக்களுக்கு ஒரு உதவியும் செய்யமுடியாத இழி நிலையில் வாழ வேண்டி இருக்கிறது.

17. கர்நாடகமும் கேரளமும் தமிழகத்திற்கு வரும் நீரைத் தடைப் படுத்தி அனுபவித்து வருகின்றனர். இந்தியப் பேரரசு 7 ஆண்டுகளாக ஒன்றும் செய்யாமல் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டேயிருக்கிறது.

18. மத்திய அரசின் பொருளுதவியைப் பெறுவதில் தமிழ்நாடு முன்பு 3 - வது இடத்தில் இருந்தது. இப்போது அது 13—வது இடத்தில் இருந்து வருந்திக் கொண்டு இருக்கிறது.

19. தமிழகத்திலுள்ள இரண்டு பெரும் கட்சிகளாகிய தி. மு. க வும்-அ. தி. மு. கவும் பிளவுபட்டு ஒன்றை ஒன்று தாக்கி கொண்டு இருப்பதால் தமிழ் அழிகிறது-தமிழ் இனம் ஒழிகிறது-தமிழ்நாடு பாழ்படுகிறது.

20. மாநில ஆட்சிகளை கலைக்கும், விளக்கமே இல்லாத சட்டங்களைவும் அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு எதிர்க் கட்சிகள் ஆட்சி புரிகின்ற மாநிலங்களை மத்திய அரசு மிரட்டிக் கொண்டே இருக்கிறது.

இந்த இழி நிலைகளை போக்கித் தமிழையும் தமிழ் மக்களையும் தமிழகத்தையும் வாழவைக்க வேண்டுமானால் தி. மு. க-அ.தி.மு.க ஆகிய இரண்டு பெரும் கட்சிகளும் ஒன்று பட்டுப் போராடியாக வேண்டும். அப்போதும் வெற்றிபெற முடியாமல் போகுமானால் இந்த இரண்டு கட்சிகளும் தமிழகத்திலுள்ள மற்ற 13 கட்சிகளையும் திரட்டி மாநில சுயாட்சி மாநாட்டையாவது உடனே கூட்டி முடிவெடுத்தாக வேண்டும்.

இந்த மாநாட்டை நடத்த தமிழகத்தின் நடுவில் உள்ள திருச்சியே ஏற்ற இடமாகும். இங்கு நடத்தினால் அரசியல் கட்சிகளைச் சேராத பொது மக்களும் பெரும் பங்கு கொள்வர். ஆகவே இந்த அழைப்பை ஏற்றுக்கொள்கிற அரசியல் கட்சிகளும் அரசியல் கட்சிகளை சார்ந்துள்ள அன்பர்களும் பொதுமக்களும் தாங்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு வேண்டி கொள்கிறேன்.

எல்லோருடைய கருத்துகளையும் அறிந்த பிறகு திருச்சியில் நடைபெற இருக்கிற இம்மாநாட்டின் வரவேற்புகுழு கூட்டத்தை நடத்தும் நாளையும் நேரத்தையும் இடத்தையும் தெரிவிப்பேன்.